
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 செப்டம்பர் 24 - செப்டம்பர் 30 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 25




## கேரள அறநிலையத்துறை அமைச்சர் கே.ராதாகிருஷ்ணன் மீது

# தீண்டாமை ஒதுக்கல்! இது தான் சனாதனம்!

**கோயில் திறப்பு விழா ஒன்றுக்குச் சென்றபோது, கோயில் அர்ச்சகர்களிடமிருந்து சாதிய பாகுபாடு நேர்ந்ததாக கேரள அறநிலையத்துறை அமைச்சர் கே.ராதாகிருஷ்ணன் கூறியிருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.**

ஐந்து முறை திருச்சூர் சேலக்கரை சட்டமன்றத் தொகுதியிலிருந்து எம்.எல்.ஏவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் கே.ராதாகிருஷ்ணன். கேரளாவில் சிறிமி(வி) கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவர். பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த இவர், பினராயி விஜயன் அமைச்சரவையில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சராகவும், அறநிலையத்துறை அமைச்சராகவும் இருக்கிறார். பட்டியலின சமூகத்திலிருந்து வந்த ஒருவரையே அறநிலையத்துறை அமைச்சராக நியமித்த இந்த முடிவை புரட்சிகரமான மாற்றம் என மக்கள் பாராட்டினர்.

ஆனால், தற்போது அவருக்கே கோயிலில் சாதிய பாகுபாடு நடந்திருக்கிறது என்பது பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. கேரளாவில் கோயில் திறப்பு விழா ஒன்றுக்குச் சென்றபோது, கோயில் அர்ச்சகர்களிடமிருந்து சாதிய பாகுபாடு நேர்ந்ததாக அறநிலையத்துறை அமைச்சர் கே.ராதாகிருஷ்ணன் கூறியிருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த ஞாயிறு அன்று, கோட்டயத்தில் நடைபெற்ற வேலன் சர்வீஸ் சொசைட்டி மாநில கூட்டத்தில், தனக்கு நேர்ந்த அந்த கசப்பான அனுபவத்தைப் பற்றிப் பேசிய அமைச்சர் கே.ராதாகிருஷ்ணன்,



``கடந்த சில மாதங்களுக்கு முன்னதாக ஒரு கோயில் திறப்பு விழாவுக்கு, அறநிலையத்துறை அமைச்சர் என்ற முறையில் நான் சென்றிருந்தேன்.

விழாவைத் தொடங்கிவைக்கும் வண்ணமாக, மேடையில் விளக்கு ஏற்றுவதற்கு அர்ச்சகர் ஒருவர் தீபத்தை எடுத்து வந்தார். என் கையில்தான் தீபத்தைத் தர வருகிறார் என்று நான் நினைத்தேன். ஆனால், அந்த தீபத்தை வைத்து அவரே விளக்கை ஏற்றினார். ஏதாவது மத நம்பிக்கையாக இருக்கும் என எண்ணி நான் ஒன்றும் கூறவில்லை. அதற்குப் பிறகு அவர், அந்த தீபத்தை சக அர்ச்சகரின் கையில் கொடுத்து, அவரையும் விளக்கை ஏற்றவைத்தார். அவர் விளக்கை ஏற்றிய பிறகு தீபத்தை எனக்குத் தரவில்லை. மாறாக தரையில் அதை வைத்தனர். தரையிலிருந்து அந்த தீபத்தை எடுத்து நான் விளக்கை ஏற்றுவேன் என அவர்கள் நினைத்தார்கள்.

தரையிலிருந்த அந்த தீபத்தை எடுத்து நான் விளக்கை ஏற்ற வேண்டுமாம். `போய் வேலையைப் பாருங்கள்' எனக் கூறி அந்த விளக்கை ஏற்ற மறுத்தேன். சாதியின் பெயரில் தீபத்தைக் கையில்கூட தராமல் தரையில் வைத்த அந்தச் செயல் என்னை பாதித்தது. இதை எதிர்த்து அந்த மேடையிலே அர்ச்சகர்களுக்கு முன்னால் நான் பேசினேன். `நான் தரும் காணிக்கை பணத்தில் உங்களுக்கு எந்தவித தீண்டாமையும், பாகுபாடும் இல்லை. ஆனால், அதை தரும் என்னிடம் மட்டும் தீண்டாமையைக் கடைப்பிடிக்கிறீர்கள். பல்வேறு சாதியைச் சேர்ந்த மக்கள் கொடுக்கும் காணிக்கைகளை நீங்கள் எந்த தயக்கமும் இன்றி வாங்குகிறீர்கள். இருந்தாலும், குறிப்பிட்ட சமூக மக்களிடம் இன்னும்கூட சாதிய பாகுபாட்டுடன்தான் அணுகுகிறீர்கள்' என நான் விமர்சித்தேன்'' எனக் கூறினார்.

மேலும், தொடர்ந்து பேசிய அவர், ``சாதிய கட்டமைப்புகள் உள்ள சமூகத்துக்குத் திரும்பிப் போக எனக்கு விருப்பமில்லை. சாதியை உருவாக்கியவர்கள் மக்களை எப்படியாவது பிளவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் மிகவும் புத்திசாலித்தனமாக அதை உருவாக்கியிருக்கின்றனர். சந்திரயான் ஏவுகணையை உருவாக்கியவர்கள், அதை உருவாக்க மூளையை உபயோகித்ததை விடவும், அதிகமாகச் சிந்தித்து மக்களைப் பிளவுபடுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் சாதியை சிலர் உருவாக்கியிருக்கின்றனர்'' என்றார்.

இருப்பினும், அமைச்சருக்கு நேர்ந்த இந்தச் சம்பவத்துக்குப் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்தச் சம்பவம் பற்றி கேரள முதல்வர் பினராயி விஜயன், ``தோழர் ராதாகிருஷ்ணனுக்கு நேரிட்ட இந்தச் சம்பவம் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கேரளாவில் இப்படி நடந்தது துரதிர்ஷ்டவசமானது, இந்தச் சம்பவத்தைப் பற்றி விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறினார்.

சபரிமலையில் தலைமை அர்ச்சகர் பதவிக்கு மலையாள பிராமணர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என்ற திருவிதாங்கூர் தேவஸ்தானம் வாரியத்தின் வருடாந்திர அறிவிப்பை எதிர்த்து, தலித் அர்ச்சகர்கள் குழு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை காக்க பா.ஜ.க. ஆட்சியை அகற்ற வேண்டும்

## நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் எம்.பி.

நாடாளுமன்றத்தின் 75 ஆண்டுகால விவாதம் சாதனைகள், அனுபவங்கள் குறித்த விவாதத்தில் பங்கேற்று மக்களவையில் கே.சுப்பராயன் எம்.பி. பேசியதாவது

மாண்புமிகு தலைவர் அவர்களே வணக்கம். 75 ஆண்டுகால அரசியலமைப்பு ஜனநாயகம் பற்றிய விவாதம் இது. சுதந்திரப் போராட்டத்தின் போதும், சுதந்திரத்திற்குப் பிறகும் நமது தேசத்தின் வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பைச் செய்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 75 ஆண்டுகளில், சில மகிழ்ச்சியான சந்தர்ப்பங்கள் தவிர பல வேதனையான நிகழ்வுகளும் இருந்தன.

டாக்டர் அம்பேத்கரின் ஒரு சிந்தனையை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கடந்த 1949 நவம்பர் 24, 25 தேதிகளில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை



ஏற்றுக்கொண்டபோது, 24 ஆம் தேதி டாக்டர் அம்பேத்கர் தனது இறுதி உரையை ஆற்றினார். அப்போது "இந்தியர்கள் தேசத்தை மதத்திற்கு மேல் வைப்பார்களா அல்லது மதத்தை தேசத்திற்கு மேல் வைப்பார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அவர்கள் மதத்தை தேசத்திற்கு மேல் வைத்தால், நமது சுதந்திரம் இரண்டாவது முறையாக ஆபத்தில் சிக்கி, என்றென்றும் அல்லல் படும் என்பது உறுதி. இது அவரது எச்சரிக்கை. 75 ஆண்டு கால அனுபவத்தைப் பார்க்கும்போது, கடந்த 9 வருடங்கள் மிகவும் வேதனையானவை என்று சொல்ல வேண்டும். விலைமதிப்பற்ற பல உயிர்களை தியாகம் செய்து பெற்ற நமது சுதந்திரம் தற்போது கேள்விக்குறியாக மாறியுள்ளது.

ஒரு தேசம் என்பது வகுப்பறைகளில் தொங்கும் வரைபடத்தில் இல்லை, ஆனால் ஒட்டுமொத்த மக்களே ஒரு தேசத்தை உருவாக்குகிறார்கள். அது 140 கோடி மக்களின் நலனைப் பிரதிபலிக்க வேண்டும், அப்போதுதான் அது நமது தேசத்தைப் பிரதிபலிக்கும். எனவே, தேசிய நலன் அதன் எல்லைகளையோ அல்லது வனப் பகுதியையோ அல்லது தார் சாலைகளையோ பாதுகாப்பதில் மட்டும் இல்லை.

தேசம் என்பது உண்மையில் அதன் மக்களைக் குறிக்கிறது. மக்கள் வெவ்வேறு மதங்களையும், வெவ்வேறு சாதிகளையும் சேர்ந்தவர்கள். அது இந்த நாட்டின் அனைத்து மக்களையும் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் அப்போதுதான் அது தேச நலனாக இருக்க முடியும். ஆகவே, கடந்த 9 வருடங்களில் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

நமது வரலாற்றில் இது ஒரு ஆபத்தான முன்னுதாரணமாகும். இந்த வீழ்ச்சிக்கான காரணங்களை விளக்குவதற்கு நான் விரிவாக மேற்கோள் காட்ட வேண்டும். ஆனால் நேரப் பற்றாக்குறை உள்ளது. கடந்த 75 ஆண்டு காலத்தைப் பற்றிப் பேசும்போது, அரசியலமைப்பு ஜனநாயகம் இப்போது திட்டமிட்ட முறையில்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

ஜனசக்தி

கட்சிக் கடிதம்

# தந்தையின் தொழிலே மகனுக்கு விஸ்வகர்மா திட்டம்!



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**நமது நாட்டின் மா மன்னராக விளங்கிவரும் நரேந்திர மோடி அவர்களுக்கு, செப்டம்பர் திங்கள் 17 பிறந்த நாள். என்ன இப்போது? தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளும் அன்றுதான்.**

மூடநம்பிக்கைகளுக்கு எதிராக, தீண்டாமைக்கு எதிராக, சாதிய திமிருக்கு எதிராக, பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராக, பொதுவுடமை சமுதாயம் காண வேண்டும் என்ற லட்சியத்திற்காக சலிப்பின்றி தன் வாழ்நாள் முழுவதும் போராடிய மாமனிதர் பெரியார்.

ஆதலால் அன்றைய தினம் நாம் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றோம்.

அதே நாளில் பிறந்தார் மோடி என்பதற்காக பிறந்தநாள் கொண்டாட முடியுமா?

தந்தை பெரியாரின் பிறந்தநாளில், தானும் பிறந்த அதே நாளில். தன் பிறந்தநாள் பரிசாக ஒன்றை அறிவித்து மகிழ்ந்துள்ளார்.

நுனி நாக்கில் தேன் தடவி ஏமாற்றுவதில் வித்தகரமான மோடி, தற்போது மீண்டும் தேன் தடவியுள்ளார்.

நீட் என்கிற விஷயத்தை தடவி பல மாணவ மாணவியர் மரணத்திற்கு காரணமான மோடி.

தேசிய கல்விக் கொள்கை என்கிற பெயரால் படிப்பை தொடர முடியாமல், பாதியில் நின்றவர்கள் குலதொழிலுக்கு செல்ல வித்திட்ட மோடி.

தற்போது விஸ்வகர்மா யோஜனா திட்டம் என்கிற கொடிய விஷத்தை கொட்டியுள்ளார்.

விஸ்வகர்மா பகவானுக்கு மலர் தூவி வணங்கி, பகவானின் பெயரில் பெரும் பாவத்தை செய்துள்ளார்.

18 வகையான தொழில்கள் இத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன

தொழில்கள் மேன்மையடைய தொழில் புரிவோர் வாழ்வில் வசந்தம் வந்திடுவது போன்ற மாயத்தோற்றம் அளித்திடும் இத்திட்டம். வஞ்சம் நிறைந்த திட்டமாகும்.

கொடிய கொரோனாவின் பெருங்கொடுமையால் நாடு முழுவதும், சிறு, குறு, நடுத்தர தொழில் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இத்தொழிலை மேற்கொண்டவர்கள் பெரும் செல்வந்தர்கள் அல்ல, சாதாரண சாமானிய மக்கள்.

தங்களின் உழைப்பையும் செலுத்தி, மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பை அளித்திட்ட தொழில்கள். கொரோனா தொற்று காரணமாக ஆண்டு கணக்கில் மூடப்பட்டு பெரும் நட்டத்திற்கு ஆளானது.

அத்தகைய பாதிப்பிலிருந்து இன்றுவரை மீள முடியாத துயரங்கள் தொடர்கின்றன.

பூட்டப்பட்ட தொழிற் கூடங்கள் இன்று வரை திறக்கப்படவில்லை. பூட்டியது பூட்டப்பட்டதாகவே உள்ளது.

பலர் தங்களது நிறுவனங்களை விற்று விட்டனர். பலர் இடத்தை வாடகைக்கு விட்டுள்ளனர்

தொழில் இழந்தோர், வேலை இழந்தோர் எண்ணிக்கை பல்லாயிரக்கணக்கில்.

இவர்களது துயர் துடைத்திட, தொழில் காப்பாற்றப்பட எத்தகைய சிறு உதவிகளையும் செய்ய மறுத்திட்ட ஒன்றிய அரசு, தற்போது 18 வகை தொழில்கள் மேம்பட, 2027/28 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கு ரூபாய் 13 ஆயிரம் கோடி செலவழிக்க அரசு இலக்கு நிர்ணயத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

ஆண்டொன்றுக்கு ரூபாய் 2600 கோடி செலவிடப்படும்

ஆமாம் 2021 ஆம் ஆண்டு விடை பெற இருக்கிற மோடி அரசு, தெரிந்தே இத்திட்டத்தை அறிவிப்பதன் நோக்கம் என்ன?

ஒவ்வொரு தோல்விக்கு பின்னரும், ஒவ்வொரு திட்டத்தை அறிவித்து தற்காத்துக் கொள்வதில் வல்லவர் மோடி.

கடந்த 2019 க்கு முன்னர் நடைபெற்ற ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல்களில் ஏற்பட்ட தோல்வியை சரிகட்ட, முன்னேறிய வகுப்பினருக்கான 10 சதவீத இட ஒதுக்கீடு கொண்டு வந்ததை மறந்திட இயலாது.

தற்போது பாஜக இந்தியா கூட்டணி கண்டு அலறுகிறது. அலறல் சத்தம் விண்ணை பிளக்கிறது.

சனாதானம் என்கிற சத்தத்தை ஓங்கி ஒலிப்பதன் மூலம், தன்னை தற்காத்துக் கொள்ள தண்டால் எடுக்கின்றது.

தனது சனாதான கொள்கையை ஓசைப்படாமல் நிறைவேற்றிட மேற்கொள்ளப்படும் வஞ்சக அறிவிப்புதான் 18 தொழில்களுக்கான “விஸ்வகர்மா யோஜனா” என்கிற மோடியின் மோசடி திட்டம்.

அவை என்னென்ன தொழில் என்று வரிசையாக பார்ப்போம்

1.குயவர்கள்



2.கொல்லர்கள்
3.தச்சர்கள்
4.சவரத் தொழில்
5.சலவைத் தொழில்
6.செருப்பு தைப்போர் காலனி தயாரிப்பவர்கள்
7.மாலை கட்டுபவர்
8.பொம்மை தயாரிப்பவர்கள்
9.மீன்பிடி வலை தயாரிப்பு
10.சுத்தியல், பூட்டு தயாரிப்பவர்கள்
11.துடைப்பம் தயாரிப்பவர்கள்
12.பொற்கொல்லர்கள்
13.பாய், கூடை தயாரிப்போர்
14.கொத்தனார்
15.படகோட்டிகள்
16.தையல் தொழிலாளர்கள்
17.கல் செதுக்குவோர்
18.சிற்பிகள்

என பட்டியலிட்டுள்ளார் மோடி

எவ்வளவு நல்லெண்ணம், இத்தொழில் மேம்பட நான் கடன் தருகிறேன் என்று மோடியார் அறிவித்து இருப்பாரேயானால் பிரச்சனை இல்லை

மாறாக, இத்தொழிலாளர் குடும்பங்களை சேர்ந்த 18 வயதுடைய இளைஞர்களுக்கு கடன் உதவி என்பதுதான் ஆபத்திலும், பேராபத்து.

அப்படி என்ன பேராபத்து, மேற்கண்ட தொழில்கள் செய்வோர் காலங்காலமாக செய்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தொழிலை செய்வோர் வாழ்க்கையில் முன்னேற்றம் என்பதனை கனவு கூட காண முடியாத பரிதாபத்தை நாம் ஒவ்வொருவரும் நன்கு அறிவோம். ஊர் தோறும் இத்தொழில் செய்கின்ற ஒவ்வொருவரும், தனது பிள்ளையாவது படித்து பட்டங்கள் பல பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டுமென கனவு காண்கின்றனர்.

அவர்களது கனவில் வெந்நீரை ஊற்றி கலைப்பது தான் மோடியார் மோசடி திட்டம்.

தொழில் செய்வோருக்கு கடன் கொடுக்க வேண்டிய மோடி, மாறாக அவனது 18 வயது பையனுக்கு ஏன் கடன் தர வேண்டும்.

பன்னிரண்டாம் வகுப்பு முடித்து மேல் படிப்பிற்கு சென்று மருத்துவராக, பொறியாளராக, வழக்கறிஞராக, நீதிபதியாக, ஆசிரியராக, பேராசிரியராக, விஞ்ஞானியாக ஆகிவிடக் கூடாது அல்லவா?

உனக்கு லட்சம் கடன். வட்டியில்லா கடன். தொழிலை நியாயமாக செய்துவிட்டால் மீண்டும், மீண்டும் கடன்.

பணத்தைக் காட்டி, ஆசையை மூட்டி, மீண்டும் உன் அப்பன் செய்த தொழிலுக்கு செல்!

குலத் தொழிலை கைவிட்டு கல்லூரிக்குப் போகும் கனவை கைவிடு! இதோ பணம்! பணம்!! லட்சமாய் பணம். இருகரம் நீட்டு, புத்தகப் பையை கீழே எறி என்கிற திட்டத்தை எந்தவித கூச்சமும் இன்றி, அச்சமும் இன்றி தனது பிறந்தநாள் பரிசாக அறிவித்துள்ளார் அயோக்கிய சிகாமணி மோடி

மூதறிஞர் என போற்றப்பட்ட ராஜாஜி, சென்னை மாகாண முதல்வராக எப்படி வந்தார் என்பது தனி கதை!

அவர் வெளிப்படையான மனிதர். எதனையும் ஒலித்து, மறைத்து பேசும் பழக்கம் உடையவர் அல்ல!

அவர் ஒரு கல்விக் கொள்கையை அறி வித்தார். அதுதான் பாதி நேரம் பள்ளி, மீதி நேரம் குலத்தொழில்.

இதனை குலக்கல்வி முறை என கூறி நிராகரித்தோம். மக்களின் கொந்தளிப்பை ஏற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அவரது கல்விக் கொள்கையும் புதைகுழிக்கு சென்றது.

ஆழக்குழி தோண்டி புதைக்கப்பட்ட, அருவருக்கத்தக்க கொள்கையை தோண்டி எடுத்து, முகம் கழுவி, பவுடர் பூசி, புது சட்டை அணிவித்து, பார்! பார்!! புது பிள்ளையை பார்! பளபளக்கும் பிள்ளையை பார்! என பம்மாத்து காட்டுகிறார் மோடி மஸ்தான் மோடி!

சிலர் இப்படியும் நினைக்கலாம் நமக்கு வரப்போகிற பணத்தை வரை விடாமல் தடுக்கிறார்களோ பாவிகள் என நம் மீது மண்ணை வாரி தூற்றலாம்.

இன்று லட்சம் ரூபாய் பணம் கிடைக்கும். ஆனால், உன் எதிர்காலம் விளக்க முடியாத பெரும் இருளை எதிர்கொள்ளும் என்பதனை நினைவிற்கொள்.

வரும் முன் உரைப்பதே மந்திரிக்கு அழகு என்பதனை ஏற்க மறுக்காதே!

சின்ன மீன்களைப் போட்டு, பெரிய மீன் பிடிக்கும் மிக கெட்டிக்காரத்தனமாக தூண்டில் போடும் மோடியின் மோசடி திட்டத்திற்கு பலிகடா ஆகிவிடாதே!

ஆட்டுக்கிடாயின் தலை மீது மக்கள் தண்ணீர் தெளித்து, சந்தனம், குங்கும பொட்டிட்டு. அழகான மாலை கொண்டு அலங்கரித்து அழைத்துச் செல்வது எங்கே?

எங்கே என்பது ஆடு அறியாது? அது அறிய வேண்டுமென நாம் எதிர்பார்க்கும் கூடாது!

ஆனாலும் நாம்?

மீண்டும் மீண்டும் மனு தர்மம்! மோடியின் ஆட்சியில், ஆர்.எஸ்.எஸ். ஆட்சியில் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

தேவை எச்சரிக்கை!
மொழி உணர்வு!!
மீண்டும் சந்திப்போம்!
வணக்கம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# பாஜகவே ஆட்சியை விட்டு வெளியேறு!

# செப். 12,13,14ல் சி.பி.ஐ.தொடர் மறியல்

**திருவள்ளூர்:** திருவள்ளூர் தலைமைதபால் நிலையம் எதிரில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக உறுப்பினர் எம். ராதாகிருஷ்ணன் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் கே. கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் வி. சரவணன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் என். எஸ். பிரதாப் சந்திரன், சி. குருமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**அரியலூர்:** அரியலூர் அண்ணா சிலை அருகில் இருந்து மறியல் ஊர்வலம் புறப்பட்டது. அரியலூர் ஒன்றிய செயலாளர் டி.ராயதுரை, திருமானூர் ஒன்றிய செயலாளர் மு. கனகராஜ் தலைமை ஏற்றனர். கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.இராமநாதன், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் த.தண்டபாணி, மாவட்ட குழு உறுப்பினர் ஜி. ஆறுமுகம் ஆகியோர் மறியலை விளக்கிப் பேசினர். மறியலில் 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஜெயங்கொண்டத்தில் ஒன்றிய செயலாளர் மணிவண்ணன் தலைமையில் இந்தியகம்யூனிஸ்ட் கட்சியினர் 8 பெண்கள் உட்பட 37 பேர் கைது செய்யப்பட்டனர். மாவட்ட செயலாளர் ராமநாதன், முன்னாள் மாவட்ட செயலாளர் உலகநாதன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். போராட்டத்தில் துணை செயலாளர்கள் ராஜ்குமார், நகர செயலாளர் பன்னீர்செல்வம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம் சிவகிரியில் டி . சுப்பையா தலைமையில் மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் பி.பாலசுப்பிரமணியன், பி. வேலு, வி.வி.சின்னவேல்சாமி முன்னிலையில், மாவட்ட செயலாளர் டி.இசக்கித்துரை துவக்கி வைத்தார்.

தென்காசிமாவட்டம்சங்கரன்கோவிலில் மாநில ஏ. ஐ. டி. யு. சி. தலைவர் எஸ். காசி விஸ்வநாதன் தலைமையில் மறியல் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் டி. இசக்கித்துரை, மாவட்ட ஏ. ஐ. டி. யு. சி. பொதுச் செயலாளர் டி.சுப்பையா, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.வேலாயுதம் ஆகியோர் போராட்டத்தை துவக்கி வைத்தனர்

**திருநெல்வேலி:** திருநெல்வேலியில் சிபிஐ ஒன்றிய செயலாளர் பி. முருகன், சி. பி. ஐ. நகரச் செயலாளர் வி. வடிவேல், மாதர் சங்க மாவட்ட செயலாளர் பி. சபியா பீவி ஆகியோர் கலந்து கொண்டனர் மறியலில் 90 பேர் கைது செய்யப்பட்டனர்.

**மதுரை:** மதுரை கடச்சனேந்தல் பகுதியில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

இதில் மாநிலக் குழு உறுப்பினர் நாகஜோதி, மாவட்ட துணைச் செயலாளர் மெய்யர் ஆகியோர் தலைமை தாங்கினர். மாவட்டக் குழு உறுப்பினர் பூமிநாதன் மற்றும் கிழக்கு தாலுகாச் செயலாளர் இராமேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து அ.சீனிவாசன் மாவட்ட செயலாளர் தலைமையில், தோழர்கள் பெ.வீரராஜ் கே.சிவராமன் கே.ராமன் வே.நீதிசோழன் பேரணியாக வந்தனர். அதன் பின்பு சீர்காழி தலைமை தபால் நிலையம் முன்பு சிலிண்டருக்கு மாலை அணிவித்து பெண்கள் கும்மி அடித்து ஒன்றிய அரசை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர்.

**திருவாரூர்:** திருவாரூர் சாலை பி.எஸ். ஆர் மணிமண்டபம் முதல் தலைமை தபால் நிலையம் வரை 7000க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாக சென்று தபால் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். திருத்துறைப்பூண்டி சட்டப்பேரவை உறுப்பினர் க. மாரிமுத்து போராட்டத்திற்கு தலைமையேற்றார். சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் கோ.பழனிச்சாமி கண்டன உரை நிகழ்த்தினார். முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கே.உலகநாதன், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாநகர் மாவட்ட குழு சார்பாக ஸ்ரீரங்கம் தேவி தியேட்டர் அருகில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் திருவரங்கம் ரயில் நிலையம் முன்பாக காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட்டது. ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் க. சுரேஷ் எம்.சி. தலைமையில் நடைபெற்ற ரயில் மறியல் போராட்டத்தை, மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம். செல்வராஜ் துவக்கி வைத்து உரையாற்றினார். மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். சிவா, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் சி.செல்வகுமார், மாநகர் மாவட்ட பொருளாளர் எம்.சண்முகம் மற்றும் மாணவர் பெருமன்ற மாநில பொருளாளர் க. இப்ராஹிம் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு கைதாகினர்.

சோமரசம்பேட்டை பகுதியில் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா தலைமையில் நடைபெற்றது .மறியல் போராட்டத்தை சி. செல்வகுமார் துவக்கி வைத்து உரையாற்றினார். போராட்டத்தை விளக்கி எம். செல்வராஜ் மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர், ஏ. ஐ. டி. யு. சி. மாவட்ட பொதுச் செயலாளர் க. சுரேஷ், விவசாய சங்க மாவட்ட செயலாளர் சிவ. சூரியன் இளைஞர்பெருமன்ற மாவட்ட செயலாளர் எம். செல்வகுமார், மாவட்ட பொருளாளர் ஏ. சண்முகம் உள்ளிட்டோர் தபால் நிலையத்தை முற்றுகையிட முயன்ற போது கைது செய்யப்பட்டனர்.

**திருச்சி புறநகர்:** மணப்பாறை நகர ஒன்றிய குழுக்கள் சார்பில் ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமை வகித்தார் நகர செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலையில் பேருந்து நிலையத்தில் ஊர்வலத்தை போக்குவரத்து கழக ஏஐடியூசி மாநில துணை பொது செயலாளர் சுப்ரமணியன் தொடங்கி வைத்தார் விவசாய சங்க மாநில துணைச் செயலாளர் இந்திரஜித் கண்டன உரை நிகழ்தினார். இந்தியன் ஓவர்சி வங்கி முன்பு மறியலில் ஈடுபட்ட முயன்றவர்களை காவல் துறை கைது செய்து செய்தனர்.

மருங்காபுரி ஒன்றிய செயலாளர் வெள்ளகண்ணு தலைமையில், புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிசாமி, மாவட்ட குழு உறுப்பினர் தேகவி ஆறுமுகம் பெரியசாமி உள்ளிட்டோரை பங்கேற்றனர்.

லால்குடி நகர ஒன்றிய குழுக்கள் சார்பில் லால்குடி ரவுண்டானவில் ஒன்றிய செயலாளர் மார்டின், நகர செயலார் குணா ஆகியோர் தலைமையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மணச்சநல்லூர் ஒன்றியம் உத்தமர்கோவில் ரயில் நிலையத்தில் கருணாநிதி தலைமை வகித்தார். மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் முத்துகிருஷ்ணன், செல்வராஜ், ராஜ்குமார், பொன்ராமன் தொப்புளான் உட்பட மறியல் செய்ய முயன்றவர்களை காவல் துறை கைது செய்தனர்.

வையம்பட்டி ஒன்றிய செயலாளர் சண்முகனந்தம் தலைமையில், புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் மாவட்ட குழு உறுப்பினர் தங்கராஜ், ஸ்டிபன் சேவியர் உள்ளிட்டோர் கைதாயினர்.

துறையூர் ஒன்றிய செயலாளர் சேகர் தலைமை வகித்தார். புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிசாமி தொடக்க உரை நிகழ்தினார். மாவட்ட குழு உறுப்பினர் கணேசன் , கந்தசாமி, சத்தீஷ்குமார் உள்ளிட்டோர் கைது னர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டத்தில் பாஜக அரசு பதவி விலகக்கோரி 21 மையங்களில் நடைபெற்ற மறியலில் 1795 தோழர்கள் கைது

விருதுநகர் மாவட்டத்தில் 13,14,15 ஆகிய தேதிகளில் 21மையங்களில் நடைபெற்ற மறியலில் 1809 தோழர்கள் கைதானார்கள். இதில் தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி. லிங்கம் எக்ஸ் எம்பி, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், மாவட்ட துணைசெயலாளர் சமுத்திரம் உள்ளிட்டோர் தலைமை வகித்தார்கள்.

**தஞ்சை தெற்கு:** அம்மாபேட்டை தலைமை தபால் நிலையம் முன்பு கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார் தலைமையில் மறியல் போராட்டம் ஒப்பாரி வைத்து நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் எம்.வெங்கடேசன், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆர்.எஸ். பாலு, மாதர் சங்க மாவட்ட தலைவர் பி. தாமரைச்செல்வி உள்ளிட்டோர் கைதாகினர்.

**ஈரோடு:** கட்சியின் ஈரோடு வட்டாரச் செயலாளர் ஜி. கல்யாணசுந்தரம் தலைமையில் காளை மாட்டு சிலை ரவுண்டானா அருகில் நடைபெற்ற போராட்டத்தில்தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பவானியில் 70 பேரும், ஜம்பையில் 136 பேரும், கோபியில் 150 பேரும், சத்தியமங்கலத்தில் 88 பேரும், பவானிசாகரில் 128 பேரும் கைது செய்யப்பட்டனர். மேலும்,பெருந்துறையில் 60 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், அந்தியூர், டி.என்.பாளையம், அரசூர், காவிலிப்பாளையம், நொச்சிக்குட்டை, உத்தண்டியூர் உள்ளிட்ட 19 மையங்களில் நடைபெற்ற மறியல் போராட்டத்தையொட்டி மொத்தம் 2193 பேர் கைதானார்கள்.

**கோவை:** சூலூரில் பி.எஸ்.என்.எல். அலுவலகம் அருகில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பெ.மௌனசாமி, மு.வ.கல்யாணசுந்தரம் தலைமை தாங்கினர்.

இதில், கட்சியின் சூலூர் வடக்கு வட்டார செயலாளர் பி.எஸ்.ராமசாமி, சூலூர் தெற்கு வட்டார செயலாளர் வே.வசந்தகுமார் உள்ளிட்டு 138 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆனைமலை பாரத ஸ்டேட் வங்கி முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. கட்சியின் மாநிலப் பொருளாளர் எம். ஆறுமுகம் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.மோகன், கே.வெங்கடாசலம் ஆகியோர் தலைமை தாங்கினர். கட்சியின் முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.கண்ணப்பன் முன்னிலை வகித்தார். 135 பேர் கைது செய்யப்பட்டனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரத்தில் மாவட்டச் செயலாளர் பா. கார்த்திக் தலைமையில் மறியல் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தொகுதி குழு செயலாளர் ஜே கமலநாதன். ஏ ஐ டி யு சி மாவட்ட செயலாளர் ஏ மூர்த்தி. சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் பி. வி. சீனிவாசன் உள்ளிட்ட தோழர்கள் பங்னோ்.

**நாகை:** தகட்டூரில் அ.பாலகுரு டி. நாராயணன் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் கலந்து கொண்டார்.

திருமருகல் ஒன்றியத்தில் மறியல் போராட்டத்தில் சி. சந்திரசேகர் மற்றும் ஆர்.கே. பாபுஜி, சரபோஜி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

நாகபட்டினத்தில் மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் தலைமைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

ஆயக்காரன்புலத்தில் அ.பாலகுரு டி. நாராயணன் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் மற்றும் தோழர்கள் கொண்டனர்.

கீழ்வேளூரில் மறியல் போராட்டம் நாகராஜ் தலைமையில் நடை பெற்றது . மகேந்திரன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருப்பூர்:** திருப்பூர் புறநகர் மாவட்டம் உடுமலைப்பேட்டை மத்திய பேருந்து நிலையம் அருகில் திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளர் கே.எம்.இசாக் தலைமையில் நடைபெற்றது. தாலூகா கமிட்டி செயலாளர்வி.சௌந்தரராஜன்.மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்.சி.சுப்பிரமணியம். மாவட்டகுழு உறுப்பினர்கள்.கே. எஸ்.ரணதேவ்.நந்தகோபால் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்

**கள்ளக்குறிச்சி**

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தில் ரயில் மறியல் போராட்டம் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் இரா. கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் கே. ராமசாமி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார் மற்றும் மாவட்டத் துணைச் செயலாளர் இரா. சின்னசாமி, மாவட்ட நிர்வாக குழு எம் கலியபெருமாள், கல்வராயன் மலை ஒன்றிய செயலாளர் சி. கிருஷ்ணமூர்த்தி, கள்ளக்குறிச்சி ஒன்றிய செயலாளர் ஏ. செந்தில் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வினாடி - வினா

1 பழைய நாடாளுமன்றக் கட்டிடம் எப்பொழுது யாரால் திறந்து வைக்கப்பட்டது?

2 பகத்சிங் 1929 ஏப்ரல் 8 அன்று எங்கு வெடிகுண்டுகளை வீசினார்?


3 நாடாளுமன்றத்தின் எந்த அவையில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர முடியும்?

4 சுதந்திர இந்தியாவில் முதல் காங்கிரஸ் அல்லாத அரசு எந்த மாநிலத்தில் அமைந்தது?

5 உலகின் முதல் பெண் விண்வெளி வீராங்கனையின் பெயர் என்ன?

6 உலகின் எந்த நாட்டில் பிரமிடுகள் அதிகமாக உள்ளன?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 25

## பெண் அர்ச்சகர் நியமனம்: வரலாற்றுச் சாதனை!

கடலூர் மாவட்டம் திட்டக்குடியைச் சேர்ந்த இளம் அறிவியல் பட்டதாரியான, மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ரம்யா; அதே ஊரைச் சேர்ந்த அவருடைய தோழி கிருஷ்ணவேணி; திருவாரூர் கொரடாச்சேரியைச் சேர்ந்த பட்டியலின சமூகத்தைச் சார்ந்த, இளநிலை காட்சித் தொடர்பியல் பட்டதாரியான ரஞ்சிதா என்ற மூன்று பெண்கள் அச்சகர்களாக நியமனம் பெற்று இருக்கிறார்கள். இந்தச் செய்தியை சாதாரணமாகப் படித்து கடந்து விடலாம். ஆனால் இதன் பின்னால் நடந்திருக்கிற போராட்டம் சாமான்யமானது அல்ல.

1970ல் அனைத்து சமூகத்தினரையும் அர்ச்சகராக்க வேண்டும் என்ற போராட்டத்தை ஜனவரி 26 ஆம் தேதி தந்தை பெரியார் அறிவித்தார். கலைஞர் அப்போது முதலமைச்சர். தாமதமே இல்லாமல், வாரிசு அடிப்படையில் நியமனம் என்ற கொள்கையை நீக்கி இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின் பிரிவுகளை சட்டப்பேரவை திருத்தியது.

ஆகமம், அனுஷ்டானம், விதிகள், தீட்சை, வாரிசுரிமை என்று ஏராளமான காரணங்களை அடுக்கி வழக்குகள் தொடுக்கப்பட்டன. நீதிபதிகளும் அவாளாகவே இருந்ததனால் நீதி பலமுறை தடுமாறியது.

2002ல் ஆதித்யன் எதிர் கேரள அரசு என்ற வழக்கில் ''ஆகமங்கள், மதப் பழக்க வழக்கங்கள் போன்றவை 'எல்லோரும் சமம்' என்ற இந்திய அரசியல் சாசன அடிப்படைக் கொள்கைக்கு எதிராக இருந்தால், அவை சட்டரீதியாக செல்லாது. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்'' என்று கேரள உயர்நீதின்றம் ஆணியறைந்து தீர்ப்பளித்தது.

2007ல் அர்ச்சகராக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு ஆறு இடங்களில், பயிற்சிப் பள்ளிகள் நிறுவப்பட்டன. 240 பேர் அதில் சேர்ந்தார்கள். அதனை எதிர்த்தும் வழக்குகள்; தடை! முதலில் சேர்ந்தவர்கள் தேர்ச்சி பெற்றதோடு புதிய மாணவர் சேர்க்கை நடத்த முடியவில்லை.

2015ல் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்தது. ஆகம விதிக்கு உட்பட்ட ஆலயங்களில் மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அர்ச்சகர் நியமனத்தில் யாராவது பாதிக்கப்பட்டால் தனித்தனியாக நீதிமன்றத்திற்கு வரலாம் என்றும் அது சொன்னது. அனைத்து ஆலயங்கள் என்பது, ஆகம ஆலயங்கள் என்று எல்லை சுருங்கியதாக நேர்மறையாய் கருதலாம்.

திமுக ஆட்சி மீண்டும் வந்த பின்பு, 2020ல் புதிய அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டனர். அதன் மீதும் வழக்கு தொடர்ந்து தடைபெறப்பட்டது. 2022 அக்டோபரில் தான் தடை விலக்கப்பட்டது. தற்போது, 12 ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்ட பயிற்சி பள்ளிகளோடு, புதியதாய் மூன்று சேர்க்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெறத் தொடங்கியுள்ளனர்.

பெரும்பான்மைச் சமூகங்கள் கோவிலுக்குள் நுழையவே கூடாது; பிறகு பட்டியலினத்தவர் வரக்கூடாது; பிறகு அனைத்து சாதியினர் அர்ச்சகராகக் கூடாது; அப்புறம் ஆகம கோவில்களில் மட்டும் அர்ச்சகராக முடியாது என்று 'இந்து மதத்தின் அடித்தளமே பிராமணீயம் தான்' என்ற வர்ணாசிரம ஆணவம் படிப்படியாகத் தகர்க்கப்பட்டுக் கொண்டே வந்திருக்கிறது.

மேற்சொன்ன வழக்குகளில், அவாள் முன்வைத்த வாதங்களைப் படித்துப் பார்த்தால், எத்தகைய வன்மம் கொட்டிக் கிடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள இயலும். பாரதிய ஜனதா ஆட்சி நடப்பதால் உரம் பெற்று, சாக்கடையாய் வழியும் அவர்களது நாராச வார்த்தைகளை காணொளிகளில் கூட பார்க்க முடியும். ''நாமெல்லாம் இந்து'' என்று அவாள் பேசுவது, எப்படிப்பட்ட ஏமாற்று வித்தை! அர்ச்சகராக இருப்பவர்களின் குடும்பத்துப் பெண்களே கருவறைக்குள் நுழைய முடியாது. பெண்ணடிமை என்பது பார்ப்பனியத்தின் அடிப்படைச் சாராம்சம்.

மேல்மருவத்தூரில் தனியார் கோவில் உள்ளது. அங்கு பெண்கள் கருவறைக்குப் போகலாம். ஆனால் ஆகம கோவில்களில் எப்படி நுழைய முடியும் என்றெல்லாம் வாய்வீச்சுகளைக் கேட்கிறோம். அங்கு பங்காரு அடிகளார் கோவில் கட்டினார். ஆகம ஆலயங்களை, அவற்றில் அர்ச்சனை செய்யும் பார்ப்பனர்களின் மூதாதையர்களா கட்டினார்கள்?

சபரிமலையில் வழிபாடு செய்ய பெண்கள் செல்லலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தும் வன்முறைகளை நடத்தி, அதைத் தடுத்த செயல் உலகறியும்.

இன்று அதே பெண்கள், அதிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலினங்களைச் சேர்ந்தவர்கள் கருவறைக்குள் சென்று அர்ச்சனை செய்யப் போகிறார்கள் என்பது அசகாய வரலாற்றுச் சாதனை! 'சனாதனம்' என்றால் என்ன என்று பதில் சொல்ல ஆள் இல்லை. சனாதனிகள், வர்ணாசிரமத்தை ஆதரிக்கிறார்களா, எதிர்க்கிறார்களா என்றும் தெளிவான பதில் இல்லை. ஆனால் மதத்தை ஆயுதமாக்கி அதிகாரத்தை தக்க வைக்க நினைக்கும் கும்பல் 'சனாதனம்' என்று ஓயாமல் ஜபிக்கிறது.

வாயால் மட்டுமல்ல, செயலாலும் தமிழ்நாடு சொல்லும் பதில்தான், பெண் அர்ச்சகர்கள் நியமனம்!

வர்ணாசிரமம் ஒழிக! பெண் விடுதலை, சமூக நீதி வெல்க!

# இயக்குநர் மணிவண்ணனும் நானும்

## நூல் வெளியீட்டு விழா

சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 18.09.2023 அன்று 'நம் பதிப்பகம்' வெளியிட்ட கே.ஜீவபாரதி எழுதிய 'இயக்குநர் மணிவண்ணனும் நானும்' என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், நடிகர் சத்யராஜ், கவிஞர், திரைப்பட இயக்குநர் ராசி.அழகப்பன், கவிஞர் முத்துலிங்கம். இயக்குநர் மணிவண்ணனின் தங்கை மேகலா, எஸ்.ஏ.பெருமாள், 'தாகம்' ஆசிரியர் செங்குட்டுவன் உள்ளிட்டோர் நூலை வெளியிட்டுப் பேசினர்.

தோழர் இரா.முத்தரசன் பேசிய போது, ''தற்போது 72 வயதை எட்டியுள்ள கே.ஜீவபாரதி, 113 புத்தகங்கள் எழுதி சாதனை படைத்துள்ளார். இன்னும் புத்தகங்கள் எழுதும், சாதனை படைக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு. அவர் எழுத வேண்டிய புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. அவர் எழுதுவார் என்ற நம்பிக்கையும் எனக்கு உள்ளது. 'இயக்குநர் மணிவண்ணனும் நானும்' என்ற இந்த நூலில் 19 கட்டுரைகளும் மூன்று பின் இணைப்புகளும் உள்ளன. திரைத்துறைக்கு வர விரும்புகிற, திரைத்துறையில் ஏதாவது பணியில் ஈடுபட விரும்புகிற இயக்குநராகவோ பாடல் ஆசிரியராகவோ வசன கர்த்தாவாகவோ அல்லது ஏதாவது ஒரு துறையில் ஈடுபட வேண்டும் என்று விரும்புகிற இளைஞர்கள் நிறையப் பேர் உள்ளனர். இத்தகைய ஆர்வமுள்ள இளைஞர்கள் அத்தனை பேரும் இந்த நூலில் உள்ள 19 கட்டுரைகளையும் கட்டாயம் படிக்க வேண்டும். அப்படிப் படித்தால், தங்களின் ஆர்வத்தை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் அல்லது தங்களுக்கு ஒத்து வராது என்று திரைத்துறையில் இருந்து ஒதுங்கிக் கொள்ள முடியும். இப்படி ஏதாவது ஒரு முடிவுக்கு வர இந்த நூல் உதவியாக இருக்கும்'' என்று இரா.முத்தரசன் கூறினார்.

நூலை வெளியிட்டுப் பேசிய நடிகர் சத்யராஜ், ''வியாசர்பாடியில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி கூட்டத்திற்கு மணிவண்ணன் ஒரு முறை என்னை அழைத்து சென்றார். அங்கு நான் பேசும்போது, 'கம்யூனிஸ்டுகள் தான் நிஜ ஹீரோ' என்று கூறினேன். அதற்குக் காரணம், நாங்கள் எல்லாம் ஒரு வழக்குப் பாய்ந்தாலே ஓடிவிடுவோம். ஆனால் இவர்கள் வழக்குகளுக்கு நடுவே படுத்துத் தூங்குகிறவர்கள்.

இன்னொரு நாள் சாக்கடை நாற்றத்திற்கு இடையே கம்யூனிஸ்ட் சின்னத்தை சுவரில் மணிவண்ணன் வரைந்து கொண்டிருந்தார். தோழர் கல்யாணசுந்தரமும் உடன் இருந்தார். இப்படியும் மணிவண்ணன் இருந்துள்ளார்.

இவருக்கும் மற்ற இயக்குநர்களுக்கும் உள்ள வித்தியாசம், 'பிறர் எழுதியதை எடுப்பார்கள். மணிவண்ணன் எடுத்ததை எழுதுவார்'. இதனை மனோரமா ஒரு முறை நினைவுபடுத்திக் கூறியுள்ளார். அந்தளவுக்கு வசனங்களை எழுதுவதில் மணிவண்ணன் வல்லவர்'' என்று நடிகர் சத்யராஜ் தெரிவித்தார்.



## 1ஆம் பக்கத் தொடர்ச்சி

தகர்க்கப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சிக்கு வருகிறார்கள், பின்னர் இந்த அரசியலமைப்பு ஜனநாயக அமைப்பை சீர்குலைக்கும் நோக்கில் அவர்களது போக்கு அமைந்து விடுகிறது. இந்தப் போக்கு மிகவும் ஆபத்தானது.

நாடாளுமன்ற படிகளை நீங்கள் வணங்குவதன் மூலம் அதை பெருமை படுத்த முடியாது இன்றைய அரசாங்கம் பாராளுமன்றத்தின் உள்ளடக்கத்தை அப்படியே பாதுகாக்கவில்லை. அவர்கள் இந்த தேசத்தையோ அல்லது பாராளுமன்ற நடைமுறையையோ விரும்புவதில்லை. இது தேசிய நலனையோ அல்லது நாடாளுமன்ற நடைமுறையையோ அல்லது ஜனநாயக தன்மையையோ இந்திய அரசியலமைப்பின் பாதுகாப்பையோ பிரதிபலிக்கவில்லை. இந்த அரசாங்கத்தை நாம் தொடர்ந்து ஆட்சியில் அமர்த்தினால், பல்லாயிரக்கணக்கான உயிர்களை தியாகம் செய்து பெற்ற பெறுமதிப்பான சுதந்திரத்தை நாம் இழக்க நேரிடும்.

சமீபத்திய ஜி20 உச்சிமாநாட்டின் வெற்றி குறித்து பல எம்.பி.க்கள் இங்கு பாராட்டினர். அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் நாம் செய்துள்ள ஒப்பந்தங்கள் என்ன? பண்டித நேரு உலக நாடுகளிடையே இந்தியாவுக்கு மரியாதைக்குரிய பிம்பத்தை உருவாக்கினார். ஆனால் இந்தியாவின் அந்த மதிப்பு இப்போது கெட்டுவிட்டது. நாம் இஸ்ரேலுடன் கூட்டணி வைத்துள்ளோம். அமெரிக்காவின் மாட்டுத் தொழுவத்தில் உள்ள மாடுகளைப் போலவே இந்தியாவும் அவர்களின் கைகளில் உள்ளது.

இந்தியாவைக் காக்க வேண்டுமானால், ஜனநாயகம், அரசியல் சாசனம், நாடாளுமன்ற ஆட்சி முறை ஆகியவற்றைப் பாதுகாக்க முடியாத இந்த அரசை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும். அப்போதுதான் இந்தியாவையும், ஜனநாயகத்தையும், அரசியல் அமைப்பையும் பாதுகாக்க முடியும். என்று பேசினார்



## பெண்களுக்கான உரிமையில் கீதா முகர்ஜி

நாடாளுமன்ற மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில், பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்பதை இந்திய கம்யூனிஸ்ட் தான் முன்னெடுத்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கீதா முகர்ஜியின் பெயர், மகளிர் இட ஒதுக்கீட்டுக்கான போராட்டத்தோடு ஒன்றிணைந்து, பெண்களுக்கான அந்த உரிமையை எல்லோரும் ஏற்கச் செய்வதற்கு, நாடாளுமன்றத்திலும் வெளியிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மிகப்பெரிய பங்காற்றி உள்ளது.

டி ராஜா
பொதுச் செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி



மு.ஆதிராமன்

# பண்பாட்டுப் போராளி! தமிழ்ஒளி

## நூற்றாண்டு விழா

''ஊரை எழுப்பிடவே துயர்
ஒன்றை நொறுக்கிடவே
தாரை முழக்கிடுவேன் – தமிழ்ச்
சாதி விழித்திடவே.''

என்பதைத்தனது பெரும்குறிக்கோளாகக் கொண்டு வாழ்நாளெல்லாம் பாட்டாளி வர்க்கத்திற்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் இலக்கியப் பணியாற்றி அமைதிகொண்ட ஒரு மக்கள் இலக்கியவாதிக்கு நூற்றாண்டு விழா.

''மக்களின் சந்தையில் இலக்கியம் நடமாட வேண்டுமென்றால் இலக்கியம் கோபுர உச்சியிலிருந்து குப்பை மேட்டிற்கு இறங்கி வரவேண்டும்.'' என்பது அவரது நோக்கமாக இருந்தது. எனவேதான் 'கலை இலக்கியம் யாவும் மக்களுக்கானது' என்ற மகத்தான பாதையில் இலக்கியப் பேராசான் தோழர் ப.ஜீவானந்தம் காட்டிய பாதையில் பயணித்த ஓர் அற்புதப் படைப்பாளி இன்று தமிழ்கூறும் நல்லுலகால் போற்றி புகழப்படுகின்றார். அவரது படைப்புகள் காலத்தால் அழியாத சாகாவரம் பெற்று உலவுகின்றன.

**'பொய் வேதம் தன்னைப் பாராதே அந்தப் போதகர் சொற்புத்தி போதம் வாராதே** (போதம் அறிவு) என்று பாடித்திரிந்த கடுவெளிச் சித்தர் கால் தடம்பட்ட பூமிஇது.

இம்மண்ணில் பத்தாண்டுகாலம் வாழ்ந்தாகவி பாரதியின் கவிதைகள் சித்தர் மரபின் நீட்சி. அம்மரபின் பகுத்தறிவுக் களஞ்சியம் இப்புதுச்சேரி மண் தந்த புரட்சிக்கவி பாரதிதாசனின் பாடல்கள். பாரதிதாசனாரைத் தம் ஆசானாகக் கொண்டு சங்க இலக்கியங்களையும், காப்பியங்களையும் உள்வாங்கி அதன் மூலம் மக்கள் இலக்கியம் படைத்தவர் இன்றைய நூற்றாண்டு நாயகர் கவிஞர் தமிழ்ஒளி.

பட்டுராசா எனச் சுற்றத்தாரால் செல்லமாக அழைக்கப்பட்ட விஜயரங்கமாக 1924ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21ஆம்நாள் குறிஞ்சிப்பாடிக்கருகில் ஆடூர் அகரத்தில் பிறப்பெடுத்தார் தமிழ் ஒளி. புதுச்சேரி கருவடிக்குப்பம் சாமிப்பிள்ளைத்தோட்டத்தை வசிப்பிடமாகக்கொண்ட பொ.சின்னையா செங்கேணி அம்மையார் அவரது பெற்றோர். அன்று உச்சத்தில் இருந்த முத்தியாலுப்பேட்டை கைத்தறி நெசவு 'பாளையக்காட் கம்பெனிகளுக்கு' நூல்களுக்குக் கஞ்சிபோட்டுக் கொடுக்கும் பாவுதோய்ச்சல் வேலைதான் அவர்களது சோற்றுக்கு வழி.

பள்ளிக்கூடம் இல்லாத ஊரில் வளர்ந்த பட்டுராசு, முத்தியாலுப்பேட்டை தர்மகல்விச்சாலையில் தொடக்கக் கல்வியிலும், கலவைக் கல்லூரியில் உயர்நிலைப் கல்வியிலும் படித்துத் தேர்ந்தார். அன்றைய நிலையில் ஒட்டுமொத்தக் கருவடிக்குப்பம் பகுதியில் அதிகம் படித்தவர் அவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றிலும் மாமரங்களும் தென்னை மரங்களும் செங்கழுநீர் மடுக்களுமாக நிறைந்திருந்தது தமிழ்ஒளி வாழ்ந்து வந்த பகுதி. அங்கேதான் சித்தானந்தசாமி (பரதேசி) கோவிலும், அதனையொட்டி பாரதி பாடிய குயில்தோப்பும் இருந்தது. பாரதிதாசன் அங்கே உலா வருவது வழக்கம். தான் எழுதிய கவிதைகளை முதலில் நண்பர்களிடம் வாசித்துக் காட்டி வாழ்த்துப் பெற்ற தமிழ்ஒளி பின் பாரதிதாசனிடம் காட்டினார். அவரைப் பாராட்டிய பாரதிதாசன் அவரைத் தன் சீடனாகவும், உதவியாளனாகவும் சேர்த்துக்கொண்டார். 'பாரதிதாசனாரின் பாண்டியன்பரிசைப் பிடியெடுத்தவர் தமிழ்ஒளி என்பது குறிப்பிடத்தக்கது.

நண்பர்களின் உதவியுடனும் பாரதிதாசனாரின் அறிமுகக் கடிதத்தோடும் கரந்தை தமிழ்க்கல்லூரியில் புலவர் படிப்பிற்காக சேர்ந்த போது, உடன் படித்தவர்களின் சாதி குறித்த குடைச்சல் அதிகமானதால் ஏற்பட்ட கசப்புணர்வில் முதலாண்டு தேர்வுக்குப்பின் தொடரமுடியாமல் வெளியேறினார் தமிழ்ஒளி. முன்னதாக திராவிட மாணவர் இயக்க மாநாடுகளில் பங்கேற்றதோடு அம்மாநாடுகளில் பாரதிதாசனாரின் வாழ்த்துக் கவிதைகளை வாசிக்கும் வாய்ப்பும் அவருக்குக்கிடைத்தது. பின் விடுதலைப் போராட்டத் தளநாயகர் வ.சுப்பையா, கவர்னர் போன்வான் என்பவனால் நாடு கடத்தப்பட்ட போது அதை எதிர்த்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டதன் மூலம் அரசியல் களத்தில் இறங்கினார். அதற்காக தமிழ்ஒளி இரண்டு வாரம் சிறை தண்டனை பெற்றார்.


தான் மாணவராக இருந்த போது எழுதிய சிற்பியின் கனவு நாடக அரங்கேற்றத்திற்காகச் சென்னை சென்ற, தமிழ்ஒளி சென்னை மக்களின் ஏற்றத்தாழ்வுடன் கூடிய இரு வேறுபட்ட வர்க்க அடுக்குகளைக் கண்டார். அடித்தட்டு மக்களுக்காக செங்கொடி இயக்கம் வீதியில் இறங்கிப் போராடுவதையும் கண்டார். நண்பர்கள் குயிலன் ஊ.கோவிந்தன் ஆகியோரின் வழியொட்டி 1947 ஆம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். ஜனசக்தி இதழின் துணை ஆசிரியராகவும் பணியாற்றினார். அந்த ஆண்டு அவர் 'நிலைபெற்ற சிலை', 'கவிஞனின் காதல்', 'வீராயி' ஆகிய மூன்று குறுங்காவியங்களை எழுதி வெளியிட்டார். வீராயி காவியம் தமிழில் வெளியான முதல் ஒடுக்கப்பட்டோருக்கான (தலித்) காவியம் என்பதில் ஐயமில்லை. 1948ல் நீ எந்தக் கட்சியில்? என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

1948ல் கட்சி தடைசெய்யப்பட்டபோது ஜீவா உள்ளிட்ட தலைவர்கள் தலைமறைவாக இருந்ததால் ஜனசக்தி பத்திரிகையை தொடர்ந்து நடத்தும் பொறுப்பை ஏற்றார். நெருக்கடி அதிகமான போது தான் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்ற 'முன்னணி' இதழின் வாயிலாக கட்சியின் செய்திகளையும், தலைவர்களின் கட்டுரைகளையும் வெளியிட்டு வந்தார். 1951 பொதுத்தேர்தலுக்கு முன் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் மீதிருந்த தடை நீக்கப்பட்டதும் ஜனசக்தி தமிழ்ஒளியின் வாழ்த்துப் பாட்டுடன் வெளிவந்தது சிறப்பு.

தமிழ்ஒளி தனது சிறுகதைகளைத் தொகுத்து 'சாக்கடைச் சமுதாயம் என்ற தலைப்பிலும், மேதினமே வருக என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பொன்றையும் வெளியிட்டார். மேதின ரோஜா என்ற கதைப் பாடலும், பல குழந்தைப் பாடல்களும் எழுதியுள்ளார். மேதினத்தைப் பற்றி முதல் கவிதையை 1949ல் வெளியிட்டவர் தமிழ்ஒளி என்றால் அது மிகையாகாது.

**'கோழிக்கு முன்னெழுந்து கொத்தடிமை போலுழைத்து
பாடுபட்ட ஏழைமுகம் பார்த்துப் பதைபதைக்க
கண்ணீர் துடைக்கவந்த காலமே நீ வருக'**

என்னும் தமிழ்ஒளியின் பாடல் இன்றும் வரலாற்றுச் சான்றாக விளங்குகின்றது. புதுச்சேரி விடுதலைப்போராட்டத் தலைவர்கள் இம்மண்ணிலிருந்து நாடுகடத்தப்பட்ட நிலையில் 1952ல் கடலூரில் நடைபெற்ற அகதிகள் மாநாட்டில் தமிழொளி பங்கேற்றுச் சிறப்புரையாற்றியுள்ளார். 1954ல் விந்தன் தொடங்கிய மனிதன் இதழுக்கு உறுதுணையாக இருந்ததோடு, அதன் துணையாசிரியராகவும் பணியாற்றினார்.



தனது பாதையில் திரைப்பட ஆர்வம் குறுக்கிட்டதால் அதில் தன் முழுகவனத்தைச் செலுத்தியும், போதிய வெற்றி கிட்டாமல் போனது அவரது வாழ்க்கையை திசை திருப்பிப் போட்டது. அவரது நிலைபெற்ற சிலை கதை 'வணங்காமுடி' திரைப்படமாக வெளிவந்தது. உலகம், அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படத்திற்குச் சில பாடல்களை எழுதியுள்ளார். அதற்கு மேல் அவருக்குக் கிட்டியது ஏமாற்றமே. அதுவே அவரை நிரந்தர நோயாளியாக்கியது. அந்நிலையிலும் 'விதியோ வீணையோ?', 'கண்ணப்பன் கிளிகள்', 'மாதவி காவியம்', 'புத்தர் பிறந்தார்' ஆகிய நூல்களைப் படைத்தார் தமிழொளி. இராகுல சங்கிருத்தியாயரின் வால்காவிலிருந்து கங்கைவரை நூலின் ஒரு பகுதியைத் தொட்டு 'கோசலக்குமாரி' என்னும் சனாதன எதிர்ப்புக் காவியத்தைப் படைத்தார் தமிழொளி. அவரது இறுதிக்காலம் காசநோயில் கழிந்தது. 1965ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் தேதி தான் சிந்திப்பதை நிறுத்திக்கொண்டார். அவரது பிற்காலப் படைப்புகள் அவரது இறுதிக்கால உற்றநண்பர் சஞ்சீவியால் வெளியிடப்பட்டது.

புதுச்சேரி கலை இலக்கியப் பெருமன்றம் 2001ம் ஆண்டு தமிழ்ஒளியின் பவளவிழாவைச் சிறப்புற நடத்தியதோடு தொடர்ந்து ஆண்டுதோறும் விழாவெடுத்து வருகின்றது. பெருமன்றம் அரசுக்கு முன் வைத்த கோரிக்கையை ஏற்று தற்போது தமிழ்ஒளி விழா அரசு விழாவாக நடத்தப்படுகிறது.

**'மண்குடில் வாழ்ந்திடும் ஏழையும் – ஒரு
மாளிகை வாழ்ந்திடு செல்வனும்
அண்ணனும் தம்பியும் என்றிடில் – துயர்
ஆக்கிடு பேதம் பொருந்துமோ?'**

என்ற தமிழ்ஒளியின் கேள்விக்கு விடை காணவேண்டிய நிலை தொடருகின்றது.

காப்பரேட் நிறுவனங்களின் பெரும் உழைப்புச் சுரண்டலுக்கும் சனாதனவாதிகளின் பண்பாட்டுக் கொடுமைகளுக்கும் எதிராக உழைக்கும் வர்க்கமும், ஒடுக்கப்பட்டோரும் ஒன்றிணைந்து பெரும் போராட்டக் களம் காணவேண்டிய நிலை உள்ளது. தமிழ்ஒளியைக் கொண்டாடுவோம். அவர் கனவை நிறைவேற்றுவோம்.

## கவிஞர் தமிழ்ஒளி அவர்களை சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் கவிஞர் தமிழ்ஒளி அவர்களை சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு நன்றி பாராட்டுகள் என தெரிவித்துள்ளார்.

கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டை முன்னிட்டு அவருக்கு தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மார்பளவு சிலை அமைக்கப்படும் மற்றும் பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில், மாணவர்களுக்கு தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்தி கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்க ரூ.50 இலட்சம் வைப்பு தொகையாக வைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருப்பது சமத்துவக் கொள்கையை உயிர் மூச்சாக கொண்டு வாழ்ந்து வரும் படைப்பாளர்களுக்கு ஊக்கமூட்டும் செயலாகும்.

நாட்டுக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் பாடுபட்ட முன்னோர்களை மறவாமல் நினைவு கூர்ந்து, நினைவுச் சின்னம் அமைத்து மரியாதை செலுத்துவது வேர்களை மறக்காத விழுதுகளின் நன்றியாக அமைந்துள்ளது.

கவிஞர் தமிழ்ஒளி உழைப்பு சுரண்டல், ஏகாதிபத்திய ஆதிக்கம், சாதி, மத வெறி செயல்கள், மூடப்பழக்க வழங்கங்களுக்கு எதிராக எரி சர நடையில் கவிதைகள் படைத்தவர். தாமரை, ஜனசக்தி பத்திரிக்கைகளில் வெளியான இவரது கவிதைகள் முற்போக்கு சக்திகளின் பெரு முழக்கமாக அமைந்ததை வரலாறு பதிவு செய்துள்ளது.

புரட்சிக் கவிஞர் தமிழ்ஒளிக்கு சிலை அமைத்து, இளைய தலைமுறை அறிந்து கொள்ள ஊக்கமூட்டும் பரிசு திட்டங்களையும் அறிவித்த முதலமைச்சருக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டி, வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது என மாநிலச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# இஸ்கஃப் நடத்திய வழக்கறிஞர் என்.டி.வானமாமலை நூற்றாண்டு விழா!

**தங்களது சொல்லால் செயலால் வாழ்வாங்கு வாழ்ந்தவர் தோழர் என்.டி.வி. என்று அழைக்கப்படும் என்.டி.வானமாமலை.**

அவரது பிறந்தநாள் நூற்றாண்டில் சென்னையில் இந்திய கலாசார நட்புறவுக் கழகம் (இஸ்கஃப்) அவருக்கு விழா!

இஸ்கஃப் மாநிலத் தலைவர் சௌமா. இராஜரத்தினம் தலைமை தாங்கினார். கே.சாந்தகுமாரி வரவேற்புரை ஆற்றினார். முனைவர் எல்.அசோக்குமார் நன்றியுரை நவின்றார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராய் சென்னை வழக்கறிஞர் வி.பி.இளம்பரிதி, பொதுச்செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் பங்கேற்று உரைநிகழ்த்தினார்.

வந்தோரை வாசலிலேயே நின்று வரவேற்ற சென்னை மாவட்டச் செயலாளர் செந்தில் தலைமையிலான தொண்டர் குழு செயல்பட்டது.

மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அமரர் என்.டி. வானமாமலை உருவப்படத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார். என்.டி.வானமாமலையோடும், தத்துவ அறிஞர் நா.வானமாமலையோடும் நாங்குநேரி பகுதிகளில் மக்கள் போராட்டங்களை எவ்வாறு ஒருங்கிணைத்து நடத்தினோம் என்பதை அழுத்தமாக வெளிப்படுத்தினார்

நாங்குநேரியில் 1948ம் ஆண்டில் இளைஞராக இருந்தபோதே என்.டி.வி., நாங்குநேரி கோயில் மாட வீதிகளில் கீழ் சாதியினர் நுழையவே முடியாதிருந்த நிலையில் 2ஆயிரம் தலித் மக்களைத் திரட்டி ஆலயத்திற்குள் நுழைந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர் நம் என்.டி.வி என்றார்.



நூற்றாண்டு விழா மலரை மேதகு உச்சநீதிமன்ற நீதிபதி இப்ராஹிம் கலிஃபுல்லா வெளியிட சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் கரங்களில் தவழ்ந்தது.

“இஸ்கஃப் குரல்” இதழ் மேனாள் உயர்நீதிமன்ற நீதியரசர் கே.சந்துரு அவர்களால் வெளியிடப்பட்டு மேனாள் நீதிபதி கே.என்.பாஷா அவர்களால் பெற்றுக்கொள்ளப் பட்டது.

என்.டி.வி பற்றிய “கரை சேர்க்கும் உயிர்த் துடுப்பாய்” என்ற வாழ்க்கை வரலாற்று நூலை எழுதிய, இந்திய வழக்கறிஞர்கள் சங்க மாநில பொதுச் செயலாளர் எஸ்.அருணாசலம் பாராட்டிச் சிறப்பிக்கப்பட்டார்.

**மேனாள் நீதியரசர் சந்துரு:**

என்னை காம்ரேட் என்று அழைத்தவர் என்.டி.வி.நாங்குநேரி என்று சொன்னவுடன் இரண்டு பெருந்தகைகள் நினைவுக்கு வருவர். ஒருவர் என்.டி.வானமாமலை. இன்னொருவர் நா.வானமாமலை. இன்றைய நாங்குநேரி வேறு வகையில் பிரபலம் ஆகியுள்ளது. சீனியர் மோகன் குமாரமங்கலம் அடவகேட் ஜெனரலாக இருந்தவர். நீதிபதியாக மறுத்து விட்டார். அவரது அலுவலகத்தில் வேலை பார்த்த 6 பேர் நீதிபதிகளாகி விட்டனர். மாறுபட்ட ஒரு தலைமுறையை உருவாக்கியவர் என்.டி.வி. நான் எளிமையாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நான் கம்யூனிஸ்ட். கம்யூனிஸ்டுகள் எல்லோரும் எளிமையாகத்தான் இருப்பார்கள். நல்லகண்ணு அதற்கான வாழும் உதாரணம்.

மேனாள் நீதியரசர் கே.என்.பாஷா:

என்னை என்.டி.வி எப்போதும் அவரது குடும்பத்தில் ஒருவராகவே பார்த்தார். அதற்கு மேல் அவரது இணையர் ராஜலட்சுமி தனக்கு இன்னொரு தாயாகவே இருந்தார் என்.டி.வி எங்களைச் செதுக்கிய சிற்பி. நீதிபதி பதவி தேடி வந்த போதும் மறுத்தார் இலவசமாகவே பல வழக்குகளை நடத்திய பொது உடைமைப் பெருந்தகை! தாய்மொழிப் பற்றாளர். தமிழில் முதலில் வழக்காடியவர்!

**மேனாள் நீதியரசர் விமலா:**

என்.டி.வியைப் பற்றி சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பாடமாக வைக்கவேண்டும் என்றதோடு ராஜலட்சுமி அம்மையாரை மார்க்ஸின் இணையர் ஜென்னிக்கு ஒப்பிட்டார்.

**ரஷ்ய கான்சல் ஜெனரல் ஒலெக் அவ்தீவ்:**

மனித மாண்புகளைப் போதித்தவர் என்.டி.வி. இஸ்கஸ் மற்றும் இஸ்கஃப் ஆகியவற்றின் பொதுச் செயலாளராக இருந்து இந்திய ரஷ்ய நல்லுறவை வளர்க்கப் பெரிதும் பாடுபட்டவர். இடதுசாரி அரசியலை மேலெடுத்துச் சென்றவர். அவர் இன்று நம்மிடையே இல்லையென்றாலும் அவரது சாதனைகளும் நினைவும் என்றும் நம்முள் நிலைத்து நிற்கும் என்றார்.

**மேனாள் நீதியரசர் ரகுபதி:**

தாய் தந்தையரை விட்டு அதிக நாட்கள் இருந்தது என்.டி.வியுடன் தான்! நாங்கள் ராஜலட்சுமியின் பிள்ளைகள். நான் மதுரைக்காரன். எம்ஜிஆர் என்பதை எம்சிஆர் என்றே சொல்வோம். ஆங்கில உச்சரிப்பு சரியாக வராது. பயிற்சி தந்து செதுக்கியவர் என்டிவி என்றார்.

**நீதியரசர் நாகமுத்து:**

நான் ஒரே முறைதான் அவரிடம் வழக்கை கொண்டு சென்றேன். படித்துவிட்டு இந்த வழக்கு தேறாது என்றார். அதேபோன்ற ஒரு வழக்கு வெற்றி பெற்றதைச் சொல்லி அந்த தீர்ப்பைக் காட்டினேன். அடிப்படையில் இது தவறான தீர்ப்பு. இத்தகைய தீர்ப்புகளைக் குறிப்பிட்டு வழக்குப் போடாதீர்கள் என்று எங்களுக்கு அறிவுரை வழங்கியவர் தோழர் என்.டி.வி என்றார்.

**நீதியரசர் ஆனந்த் வெங்கடேஷ்:**

நல்லவர்கள் புறக்கணிக்கப்படும் காலம் இது. நல்லவர்களை நினைவு வைத்துக் கொள்ளும் மாண்பை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதைக் காட்டவே இத்தகைய விழாக்கள்.



செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார், “செக்கல்ல இந்தியாவை இழுத்துக் கொண்டிருக்கிறேன்” என்றவர். சிறையிலிருந்து வெளியே வந்த போது வரவேற்க ஒரே ஒருவர் சுப்பிரமணிய சிவா மட்டும் வருகிறார். சென்னையில் மண்ணெண்ணெய், மளிகை வியாபாரம் செய்கிறார். சிரமப்பட்டு வாழ்ந்து மடிகிறார்.

மகாகவி பாரதி இறந்தபோது பக்கத்தில் இருந்தவர்கள் 16 பேர்தான்.

இந்த அடிப்படையில் இந்த விழாவைப் பார்க்க வேண்டும். என்டிவியைப் பற்றி இளைஞர்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

**இரா. முத்தரசன்:**

என்.டி.வி, கம்யூனிஸ்ட் கட்சியில் சேரக் காரணமாய் இருந்தவர் ஆர்.நல்லகண்ணு. அவரை சந்திக்க நாங்கள் சென்றபோது காபி தந்து உபசரித்தார். அதே நேரத்தில் காலதாமதமாய்ப் போனதற்கு கடிந்து கொண்டவர். அப்படி நேரந்தவறாமையை எப்போதும் பின்பற்றியவர் அவர். இவரைப் பற்றி வி.ஆர்.கிருஷ்ணய்யர் மிகச் சிறந்த மனித நேயர் என்று பாராட்டியுள்ளார்.

இவர் விரும்பியிருந்தால் பணம் சம்பாதித் திருக்கலாம். நீதிபதியாகி இருக்கலாம். ஏன் கவர்னராகவே கூட போயிருக்கலாம்.

நல்லகண்ணு கோவையில் தோல்வி அடைந்தபோது நக்கீரன் கேள்வி பதிலில் காந்தியைக் கொன்ற தேசம் இது என்று சொல்லியிருந்தார்.

புகழேணியின் உச்சியில் இருந்த திருவாவடுதுறை ராஜரத்தினம் கச்சேரி வைத்து என்டிவிக்கு பூணூல் அணிவிக்கும் விழா நடந்தது. ஆனால் பின்னர் அதைக் கழற்றி எறிந்துவிட்டு கம்யூனிசக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர். சிண்டும் காணாமல் போனது.

**நாங்கள் நேர்மையானவர்கள்.**

நடிக்கத் தெரியாதவர்கள். ஆனால் நேர்மைதான் என்றும் நிலைத்து நிற்கும். அவர் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினராக இருந்தபோது, அப்போது நான் இளம் வயதிலிருந்த நானும் உறுப்பினராக இருக்கும் வாய்ப்பைக் கட்சி எனக்கு அளித்தது. மாநிலக் குழு கூட்டமோ அல்லது மாநில மாநாடோ எதுவாக இருந்தாலும், அவர் முதலில் பெயர் கொடுத்து விவாதிப்பார். மாற்றுக் கருத்துக்களை அழுத்தமாக முன்வைத்து வாதாடுவார். கடைசியில் கட்சி எடுக்கும் முடிவை தன் முடிவாக ஏற்றுக் கொள்வார். கட்சியை விட்டு எள் முனையளவும் எப்போதும் அவர் விலகி நின்றது இல்லை.

பல சட்டங்களைப் படித்து தேர்வுபெறும் வழக்கறிஞர்கள், தம் தொழிலில் அற நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டியதும் அவசியம். அந்த வகையில் “கரை சேர்க்கும் உயிர்த் துடுப்பாய்” என்ற இந்த புத்தகத்தை பாட நூலாக வைத்தால், சட்ட மாணவர்களின் தொழில் ரீதியான வாழ்க்கைத் தரத்தை மிகவும் உயர்த்தும்.

**மேனாள் நீதியரசர் இப்ராஹிம் கலிபுல்லா:**

நான் முழுக்க முழுக்க நிர்வாகத்தின் வக்கீலாக இருந்தேன். நீதிபதி இருக்கையில் அமர்ந்ததும் தொழிலாளர் நீதிபதியாகிவிட்டேன். நானும் ஒரு தோழர் ஆகிவிட்டேன் என்று நானே கூறிக் கொள்கிறேன்.

எனது குருநாராயணசாமி என்னைப்பற்றி அவரது பாராட்டு விழாவின் போது குறிப்பிட்டதைத் தொடர்ந்து என்னைப் பாராட்டி மகிழ்ந்தவர் தோழர் என்.டி.வி. என்றார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சி தேசிய கீதத்துடன் இனிதே நிறைவுற்றது. இன்னும் பல நாட்களுக்கு நிகழ்ச்சிக்கு நேரில் சென்றவர்கள், இந்த நிகழ்ச்சி பற்றி அசை போடலாம்.

**வி.கே. கோபாலன்**
**எஸ். அருணாசலம்**

## குலாம் தஸ்தகீர்!

போபால் விஷவாயு கசிவின்போது, ரயில் நிலையத்தில் இடைவிடாமல் இரவெல்லாம் மற்ற ரயில் நிலையங்களுக்கு போன் செய்து அந்த வழியாக ரயில்கள் வரவிடாமல் தடுத்து ஆயிரக்கணக்கான மனிதர்களின் உயிர்களைக் காப்பாற்றி, தனது இருக்கையில் அமர்ந்தவாறு மடிந்து போன ஸ்டேஷன் மாஸ்டரின் பெயர் துபே என்கிறார் நீதியரசர் ஆனந்த வெங்கடேசன்.

ஆனால் அவ்வாறு பெரும் பணி செய்து இறந்து போனது டெபுடி ஸ்டேஷன் மாஸ்டரான குலாம் தஸ்தகீர்!

சரியான விஷயத்தை சரியாக சொன்ன நீதியரசர், ஸ்டேஷன் மாஸ்டரின் பெயரை மட்டும் மாற்றிச் சொல்லிவிட்டார். உரியவருக்கு புகழ் சென்று சேர வேண்டும் என்பதால் இந்ததிருத்தத்தை வெளியிடுகிறோம்

**ஆசிரியர்**

# ஒன்றிய பாஜகவின் அரசியல் வன்முறையும் 'இந்தியா' கூட்டணியின் முடிவும்



வ.மணிமாறன்

**ஊடக உலகில் பரபரப்பாக பேசப்பட்ட மூன்று முக்கிய நிகழ்வுகள், இன்றைய அரசியல் போக்கையும் ஊடக சுதந்திரத்தின் நிலையையும் வெளிப்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன.**

**முதலாவது நிகழ்வு:** இந்தியா டுடே தொலைக்காட்சியில் இருந்து செய்தியாளர் சுப்ரியா பரத்வாஜ்; என்டிடிவியில் (NDTV) இருந்து சோஹித் மிஸ்ரா ஆகிய இருவரின் பதவி விலகலும், அதற்கு அவர்கள் கூறியிருக்கும் காரணங்களும் முக்கியமானவை ஆகும்.

அதானி குழுமத்தின் பங்குச்சந்தை ஊழலை ஒசிசிஆர்பி (OCCRP) நிறுவனம் அம்பலப்படுத்தி அறிக்கை வெளியிட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. இது குறித்து காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்தி செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அதில் செய்தியாளர் சந்திப்பில் ராகுல் காந்தியிடம் எதிர்மறையான கேள்விகளை கேட்குமாறும்; குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும்; ராகுல் காந்தியின் எடுத்துரைப்பு (Narrative) முறையை திசைதிருப்பி விட வேண்டும் என்றும் நிர்வாகம் கட்டாயப்படுத்தியதாக தெரிவித்துள்ளனர். இதனை ஏற்க மறுத்து பதவி விலகுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஒன்றிய பாஜக அரசின் இந்துத்துவ அரசியலையும்; அதன் தேசபக்த வெறியூட்டும் கூச்சலின் எடுத்துரைப்பு பாணியையும் வட இந்திய ஊடகங்கள் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டுள்ளன. விதிவிலக்காக இருந்து வந்த என்டிடிவி (NDTV) நிறுவனத்தின் பங்குகளையும் அதானி கையகப்படுத்திய பிறகு, அதன் போக்கும் மாறிவிட்டது. ஜீ டிவி குழுமம் பாஜகவை நேரடியாக ஆதரித்து அதன் ஊதுகுழலாகவே செயல்படுகின்றது.

இந்த நிறுவனங்களில் இந்துத்துவ அரசியலின் எடுத்துரைப்பு (நேரேட்டிவ்) பாணியுடன் முரண்படும் செய்தியாளர்கள் விலக வேண்டிய நெருக்கடிக்கு தள்ளப்படுகின்றனர். இப்படிப் பலர் இந்த நிறுவனங்களில் இருந்து வெளியேறியும் உள்ளனர். இத்தகைய சூழலைத்தான் சுப்ரியா பரத்வாஜும், சோஹித் மிஸ்ராவும் எதிர்கொண்டு பதவி விலகி உள்ளனர்.

**இரண்டாவது நிகழ்வு:** மணிப்பூர் வன்முறைகள் குறித்து இந்தியப் பத்திரிக்கை ஆசிரியர்கள் சங்கம் (Editors Guild of India - EGI) நேரில் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டதற்கு எதிராக கடுமையான பிரிவுகளில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பாஜக ஆளும் மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 3 மாதங்களாக வன்முறை பதற்றம் தலைவிரித்தாடுகிறது. இதனால் மணிப்பூரின் உண்மையான நிலவரத்தை அறிந்துகொள்வதற்காக இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் (EGI) நேரில் சென்று ஆய்வு நடத்தியது. மூன்று பேர் கொண்ட குழுவை அனுப்பியது. அந்தக் குழு ஆகஸ்ட் 7 முதல் 10 ஆம் தேதி வரை மணிப்பூரின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வில் தெரியவந்த உண்மைகளை செப்டம்பர் 2 ஆம் தேதியன்று அறிக்கையாக வெளியிட்டது.

அதில், மணிப்பூர் வன்முறையில் மாநில (பாஜக) அரசு ஒரு சார்பாக நடந்துகொண்டதற்கான அறிகுறிகள் தென்பட்டன, குறிப்பாக ஊடகங்கள் ஒருசார்பாக செயல்பட்டன என்பது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. மணிப்பூர் மாநிலத்தில் இணைய சேவை முடக்கப்பட்டதால் செய்திகளை சேகரிப்பதில் பிரச்சனை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையால் ஆத்திரமடைந்த அம்மாநில பாஜக, மணிப்பூர் அரசாங்கத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர் நங்கோம் சரத் சிங், இம்பால் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த சொரோ கைபம் தௌதம் ஆகியோர் மூலம், மணிப்பூரில் மோதலைத் தூண்ட முயற்சிப்பதாக பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் மீது காவல்துறையில் புகார் அளித்தது. அம்மாநில காவல்துறையும், பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் அதன் மூன்று உறுப்பினர்களுக்கு எதிராக மோதலைத் தூண்டும் முயற்சி, அவதூறு ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்தது.

இதற்கு எதிராக இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டது. இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், ஜே.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு, இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் (EGI) தலைவர் சீமா முஸ்தபா, சஞ்சய் கபூர், சீமா குஹா, பாரத் பூஷன் ஆகிய 4 பேர் மீது செப்டம்பர் 15 வரை எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என மணிப்பூர் பாஜக அரசுக்கு உத்தரவிட்டது. செப்டம்பர் 15 அன்று உச்சநீதிமன்றத்தில் மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்திற்கு எதிராக புகார் அளித்தவர்களை நோக்கி தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் சரமாரியாக கேள்விகளை எழுப்பினார்.

"எந்த அடிப்படையில் அவர்களின் அறிக்கையின் காரணமாக இந்த குற்றங்கள் நடைபெற்றதாக கூறுகிறீர்கள்? இந்திய தண்டனைச் சட்டம் 153ஏ பிரிவின் கீழ் (வெவ்வேறு குழுக்களிடையே பகைமையை ஊக்குவிக்கும்) வழக்குப்பதிவு செய்திருக்கிறீர்கள், எதன் அடிப்படையில் இந்தப் பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது? அங்கு என்ன நடக்கிறது? எதன் அடிப்படையில் அவர்கள் மீது இந்த குற்றத்தை சுமத்தி இருக்கிறீர்கள்? என்று தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.

"புகார்களில் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் மீது கூறப்படும் குற்றங்களில் ஒரு சிறு உண்மை கூட கிடையாது" என்று கூறிய தலைமை நீதிபதி "மணிப்பூர் வன்முறை தொடர்பாக, இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்(EGI) வெளியிட்ட அறிக்கை சரியாக இருக்கலாம். தவறாகவும் இருக்கலாம். ஆனால், தங்களின் கருத்துக்களை வெளியிடுவதற்கான கருத்து சுதந்திரம் அவர்களுக்கு உண்டு" என்றார்.

பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளை, அவை சரியோ, தவறோ ஐபிசி 153ஏ பிரிவின் கீழ் அவற்றைக் குற்றமாகக் கருத முடியாது; அவ்வாறு செய்வது கருத்து சுதந்திரத்திற்கு எதிரானது. இந்த விவகாரத்தில், இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்திற்கு எதிரான பொதுநல வழக்கை மணிப்பூர் உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டிருக்கக் கூடாது என்றும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

ஒன்றியத்திலோ மாநிலத்திலோ எங்கு பாஜக ஆட்சி செய்தாலும் கருத்து சுதந்திரத்தையும் ஊடக சுதந்திரத்தையும் முடக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடும் அதன் பாசிசப் போக்கை வெளிப்படுத்தும் இன்னொரு எடுத்துக்காட்டு இதுவாகும்.

**மூன்றாவது நிகழ்வு:** இந்தியாவின் பிரபலமான தொலைக்காட்சி செய்தி ஆளுமைகள் உட்பட 14 தொகுப்பாளர்களின் நிகழ்ச்சிகள் மற்றும் விவாதங்களைப் புறக்கணிக்க எதிர்க்கட்சிகளின் கூட்டணி முடிவெடுத்துள்ளது.

'இந்தியா' கூட்டணியின் ஊடகக்குழு கூட்டம் காணொலி வழியாக செப்டம்பர் 14 ஆம் தேதி நடைபெற்றது. இதில், 14 தொலைக்காட்சி தொகுப்பாளர்களின் நிகழ்ச்சிகளில் பங்கேற்க, 'இந்தியா' கூட்டணி சார்பில் எவரையும் அனுப்ப வேண்டாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது



என்று ஊடகக் குழுவில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பவன் கெரா தெரிவித்துள்ளார்.

மேலும், "எந்தத் தொலைக்காட்சி தொகுப்பாளருக்கும் 'இந்தியா' கூட்டணி எதிரானது அல்ல. கடந்த 9 ஆண்டுகளாக வெறுப்புணர்வைப் பரப்பும் சந்தையை சில தொலைக்காட்சிகள் திறந்துள்ளன. வெறுப்புணர்வைப் பரப்பும் எந்தவொரு நடவடிக்கையிலும் அங்கம் வகிக்கக் கூடாது என 'இந்தியா' கூட்டணி தீர்மானித்துள்ளது. இதுவே 14 தொலைக்காட்சி தொகுப்பாளர்களின் நிகழ்ச்சிகளை 'இந்தியா' கூட்டணி புறக்கணிப்பதற்கான காரணம்" என்றும் பவன் கெரா கூறியுள்ளார்.

அதேநேரத்தில் 'இந்தியா' கூட்டணி அறிவித்துள்ள இந்த முடிவை பாஜகவும், புறக்கணிக்கப்பட்ட தொலைக்காட்சி தொகுப்பாளர்களும் கடுமையாக சாடியுள்ளனர். புறக்கணிப்பு முடிவு கருத்து சுதந்திரத்திற்கும் ஊடக உரிமைகளுக்கும் எதிரானது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

அரசு கைது செய்துவிடும் என்ற அச்சமின்றி பேசுவதற்கான உரிமையைத் தான் கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம் என்கிறோம். பிரதமர் மோடியை விமர்சித்ததற்காகவும்; ஒன்றிய, மாநில பாஜக அரசுகளின் செயல்பாடுகளை விமர்சித்து உண்மையைப் பேசியதற்காகவும், சித்திக் கப்பான், முகமது சுபைர், அஜித் சுபைர், ஜஸ்பால் சிங், சஜாத் குல், கிஷோர் சந்திர வாங்கல், பிரசாந்த் மனோஜியா உள்ளிட்ட பத்திரிகையாளர்கள் சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்டனர்.

"ஆளும் வர்க்கத்தின் கருத்தியலுடன் உடன்பாட்டு மனப்பாங்கை மக்களிடம் உற்பத்தி செய்வதுதான் (Manufacturing Consent) ஊடகங்களின் பணி" என்பார் அமெரிக்க அறிஞர் நோம் சாம்ஸ்கி. தற்போது ஆங்கில மற்றும் இந்தி ஊடகங்கள், ஆர்எஸ்எஸ், பாஜகவின் பிளவுவாத; வெறுப்பு அரசியலுடன் உடன்படும் மனப்பாங்கை மக்களிடம் உற்பத்தி செய்யும் பணியைத்தான் மேற்கொண்டுள்ளன.

இவற்றை எல்லாம் கணக்கில் கொண்டு பார்த்தால், எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்பு பேச்சு சுதந்திரத்தை மீறுவதாகக் குறிப்பிட முடியாது.

### பாஜக ஊதுகுழலாக மாறிய ஊடகங்கள்

10 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கில ஊடகங்கள் பல்வேறு விதமான முரண்பட்ட சிந்தனை கொண்ட உரையாடல்களை நியாயமாக நடத்தி வந்தன. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் அணுசக்தி கொள்கைக்கு எதிராக இயங்கி வந்த செயல்பாட்டாளர்களின் கருத்துக்களை பொதுத்தளத்தில் விவாதமாக்கின. ஆனால், இன்று ரிபப்ளிக் டிவி, டைம்ஸ் நவ் டிவி போன்றவை சபரிமலை விவகாரத்தில் மிகப் பிற்போக்குத்தனமான விவாதத்தை வலிந்து முன்னெடுத்தன. பிற்போக்கு கருத்துக்கள் புனிதமும் நம்பிக்கையும் சார்ந்தவை என்று வலியுறுத்தின.

கடந்த சில மாதங்களாக தென்னிந்தியா மற்றும் தமிழ்நாடு பற்றியும் தமிழர்கள் குறித்தும் அவர்கள் முன்வைத்த உரையாடல்கள் மலினமானவை. சனாதன எதிர்ப்பு குறித்து இடதுசாரி, திராவிட ஊடகத் தொடர்பாளர்களின் குரல்கள் நசுக்கப்படுகின்றன. காட்டுக் கூச்சல் போட்டு அவர்களைத் தடுப்பது தொடர்கிறது. இதன் விளைவாக தமிழர்கள் மற்றும் திராவிட, இடதுசாரி சிந்தனை கொண்டவர்களுக்கு எதிரான வன்முறைகள் வட இந்தியா முழுவதும் தூண்டப்படுகின்றன. இந்த ஊடகங்கள் தான் அர்பன் நக்சல் என்ற சொல்லாடலை உற்பத்தி செய்து பரப்பின.

ஊடகங்களின் இந்தப் பாகுபாடான அணுகுமுறையால் எதிர்க்கட்சிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதை உணர முடியும். இந்நிலையில், சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் புறக்கணிப்பதன் மூலம், போட்டியில் பங்கேற்பதில் இருந்து 'இந்தியா' கூட்டணி விலகுகிறது. இந்த செயலுத்தி, ஊடகங்களின் ஒரு சார்புப் போக்கை வெளிச்சமிட்டுக் காட்டி அவற்றுக்கு நெருக்கடியை உருவாக்கும்.

இந்த மூன்று நிகழ்வுகளும் வெவ்வேறு பரிமாணங்களை கொண்டவை. பத்திரிகையாளர்கள், ஊடகங்கள், ஊடக அமைப்புகள், எதிர்க்கட்சிகள் என அனைத்தின் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்தவோ முடக்கவோ ஆளும் பாஜக தொடர்ந்து முயன்று வருவதை வெளிப்படுத்துகின்றன. இந்தியாவில் பத்திரிகை சுதந்திரமும் கருத்துரிமையும் எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் இவை வெளிச்சமிட்டு காட்டுகின்றன.

பத்திரிகை சுதந்திர குறியீட்டில், 2015 ஆம் ஆண்டு 136 வது இடத்தில் இந்தியா இருந்தது. தற்போது (2023 ஆம் ஆண்டு) 161 வது இடத்திற்குச் சென்றுள்ளது. 180 நாடுகளில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் இந்தியா 25 இடங்கள் பின்னோக்கி சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதிகாரத்தை நோக்கி உண்மையைப் பேசியதற்காக, ராஜேஷ் சிங், சுபம் மணி திரிபாதி, மோசஸ், பராக் புயான், கௌரி லங்கேஷ் ஆகிய பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, ஆர்எஸ்எஸ், பாஜகவின் அரசியல், பண்பாட்டுக் கதையாடலை (நேரேட்டிவ்) முறியடிப்பதற்கான நீண்ட கருத்துப் போராட்டத்தை நடத்த ஜனநாயக சக்திகளும் கம்யூனிஸ்டுகளும் தயாராக வேண்டும். களப் போராட்டங்களைக் கட்டமைக்க வேண்டும். இவற்றைச் செய்வது அவசரமும் அவசியமும் ஆகும்.

தொடர்புக்கு: 9500001224

# வண்டவாளம்

## பழனி கோயிலில் பசுக்கள் பட்டினி சாவு!




பழனி தண்டாயுதபாணி கோவில் கோசலைக்கு பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய 17 பசுக்கள் போதிய உணவின்றி உயிர் இழந்துள்ளன. இதுகுறித்து வழக்கறிஞர் ஆணையர் கள ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

கோசலையில் உள்ள பசுக்களை பாதுகாக்கவும் பராமரிக்கவும் பணியாளர்களும் மருத்துவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் இருப்பினும் 17 பசுக்கள் செத்துப் போனது எப்படி? என்ற கேள்வியை எழுப்பியதோடு பசுக்களை காப்பாற்றவும் பழனியைச் சார்ந்த ராமசாமி என்பவர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். இந்த மனு நீதிபதிகள் எஸ் எஸ் சுந்தர் டி. பரத் சக்கரவர்த்தி முன்னிலையில் வந்தது பழனி கோயிலுக்கு பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய பசுக்கள் சுய உதவிக் குழுக்களுக்கு எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது கோசலையில் பசுக்கள் எண்ணிக்கை அதிகரித்தால் அரசுகளை இடம் மாற்ற வேண்டும் ஒட்டுமொத்த பசுக்களின் குறித்து முறையான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

கோமாதா பக்தர்கள் எங்கே போனார்கள் அவர்களின் கூக்குரல் எங்கே போயிற்று?

## உ.பி.யில் மருத்துவமனையை இடிக்க உத்தரவிட்ட பாஜக மேயர்!



உபி யில் தலைநகர் லக்னோவுக்கு அருகில் பீஜ்னூரில் விநாயகா மெடிக்கேர் மருத்துவமனை உள்ளது இங்கு ஈவின சிகிச்சை பிரிவில் (ICU) அனுமதிக்கப்பட்டிருந்த ஓய்வு பெற்ற ராணுவ வீரர் கரேன் குமாரை பார்ப்பதற்கு லக்னோ நகர மேயர் சுஷ்மா காரக்வால் வந்தார் மருத்துவ விதிப்படி காலணி அணிந்து சொல்லக்கூடாது என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். நான் காலணி அணிந்து தான் செல்வேன் என்று மேயர் நிர்வாகத்துடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

பின்பு கிளம்பிச் சென்ற அவர் மருத்துவமனை மீது ஃபுல்டவுசர் நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன் பிறகு பேச்சுவார்த்தை மூலம் மருத்துவமனை தப்பியுள்ளது. இந்த விவரம் வெளியில் தெரிய வர சமூக வலைதளங்களில் மேயருக்கு கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது!


அதிகாரத் திமிரில் எதையும் செய்யலாமா?

## உபி போலீசாருக்கு பஞ்சாங்கத்தை கடைப்பிடிக்குமாறு உத்தரவு!

சாமியாரை முதல்வராக கொண்ட உத்தரப்பிரதேச டிஜிபி விஜயகுமார் அனைத்து மாநில காவல்துறையினருக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்.

அதில் அம்மாவாசை நாளில் ஒற்றுமைகள் தீவிரமாக கண்காணிக்குமாறும் அதற்கு முதல் நாள் உரிய முன்னேற்பார்கள் செய்யுமாறும் அலி இருக்கிறார்.

காவல்துறையினர் மட்டுமின்றி பொதுமக்களும் அம்மாவாசை போன்ற நாட்களுக்கு முன்பு ஒரு வாரமும் அமாவாசைக்கு பின்பு சில நாட்களும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்.



அமாவாசையில் இறக்கும் குழந்தைகள் திருடர்களாக வருவார்கள் என்று ஒரு மூடநம்பிக்கை சமூகத்தில் இருந்தது.

பாஜக ஆட்சி நடத்தும் உபி மாநிலத்தில் பஞ்சாங்கத்தை கடைப்பிடிக்குமாறு காவல்துறையினருக்கும் பொதுமக்களுக்கும் சித்தரிக்கு அனுப்பப்பட்டுள்ளது சமூகத்தை பின்னோக்கி இருப்பதாகும்.

இந்த நிகழ்வுக்கு உபி காவல்துறைக்கு உள்ளேயே எதற்கு முனுமுனுப்பு கிளம்பியுள்ளது. சமூக ஊடகங்களில் சாட்டையடி கொடுக்கப்படுகிறது.

அதற்கு அடுத்து குற்றங்களை கண்டுபிடிப்பதற்கு ஜாதகத்தில் நேரம் பார்த்து தான் செல்ல வேண்டும் என்ற அறிவிப்பு வந்தாலும் வரலாம்!

# கால... விண்வெளி கா...



அருண் நெடுஞ்செழியன்

**நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக ரோவர் ஊர்தியை தரையிறக்கிய சந்திரயான்3 திட்ட வெற்றியானது அண்மைக் காலத்தின் முக்கிய பேசுபொருளாக மாறியது.**

சந்திரயான்3 இன் திட்ட இயக்குநர் தமிழர் என்ற ‘பெருமை' தொடங்கி தென் துருவங்களில் ரோவரை தரை இறக்கிய முதல் நாடு என்ற ‘பெருமை' வரை பல ‘‘பெருமைகள்'' பரபரப்பாக பேசப்படுகின்றன. இந்த பெருமைகளை நாம் கொண்டாடுகிற அதே வேளையில், விண்வெளி யுகம் இன்று எதை நோக்கிச் செல்கிறது? இதனால் மக்களுக்கான பயன் என்ன? என்ற கேள்விகளை நாம் கேட்டாக வேண்டும்.

### புவிசார் அரசியலும் விண்வெளிப் போட்டியும்

சுமார் அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பாக நிலவில் வெற்றிகரமாக ரோபட் ரோவரை தரை இறக்கி பல்வேறு விண்வெளி சாதனைகள் செய்து வந்த ரஷ்யா 1950 களில் அமெரிக்காவிற்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்து வந்தது. ஆனால் 1962ல் அப்பல்லோ 11 திட்டத்தின் மூலமாக நிலவில் வெற்றிகரமாக மனிதர்களை தரை இறக்கியதன் மூலமாக விண்வெளிப் போட்டியில் பெயர் புகழைப் பெற்று வெற்றி வாகை சூடியது அமெரிக்கா.

அதேநேரம், 1972 ஆம் ஆண்டில் அப்பல்லோ 17 திட்டத்திற்கு பிறகு நிலவு குறித்த ஆர்வத்தை அமெரிக்கா முற்றிலும் குறைத்துவிட்டது. தற்போது ரோவர் ஊர்திகளை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பி ஆராய்வது, தொலைதூர விண்வெளி தொலைநோக்கியை அனுப்பி ஆராய்வது போன்ற ரோவர் திட்டங்களையே அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது.

ரஷ்யாவைப் பொறுத்தவரை அண்மையில் நிலவிற்கு அனுப்பிய லூனா25 திட்டம் தோல்வியில் முடிந்திருக்கிறது. ரஷ்யா தனது பழைய விண்வெளி நிறுவன வலிமையை இழந்துள்ளதாகக் கூட இந்தத் தோல்வியை எடுத்துக் கொள்ளலாம். தற்போது ரஷ்யா, உக்ரைன் போரில் தனது பொருளாதாரத்தை இழந்து வருவதையும் கவனத்தில் கொண்டால், ரஷ்யா தனது பழைய விண்வெளி வலிமையை மீண்டும் பெறுவது கடினமாக ஒன்றாகத் தெரிகிறது. மேலும், அமெரிக்கா ஐரோப்பிய யூனியன் நாடுகள், ஜப்பான் மற்றும் கனடா ஆகிய நாடுகளுடனான கூட்டு ஒப்பந்தத்தின் பேரில் சர்வதேச விண்வெளி ஆய்வு(மிஷிஷி) நிறுவனத்தில் ஒத்துழைத்துக் கொண்டிருந்த ரஷ்யா, தற்போது உக்ரைன் போருக்கு பிறகு இந்தக் கூட்டமைப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

195060 களில் சோவியத் ரஷ்யாவும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு விண்வெளி ஆய்வுகளை மேற்கொண்ட கெடுபிடி காலத்திற்கு பிறகு தங்களது விண்வெளி துறை சார்ந்த பொருளாதார முதலீடுகளை பெரிதாக குறைத்துக்கொண்டதாக கொள்ளலாம். 19721990 வரையிலான நீண்ட காலத்தில் ஜப்பானின் ஹகரோனா ஆய்வுக் களம் நிலாவில் தொடர்பு ஏற்படுத்திய மூன்றாவது நாடு என்ற பெயர் பெற்றது.

அடுத்து சீனா தனது சேஞ்ச் திட்டம் மூலமாகவும் இந்தியா சந்திரயான் திட்டம் மூலமாகவும் நிலவை ஆய்வு செய்வதற்கு ஆய்வுக் களங்களை அனுப்பின. அவற்றில் 2018 ஆம் ஆண்டில் சீனா அனுப்பிய சேஞ்ச்4 திட்டம் நிலவில் வெற்றிகரமாக ரோவரை தரை இறக்கி வெற்றி பெற்றது.

விண்வெளித் துறையில் இன்று பெரும் பாய்ச்சல் நிகழ்த்துகிற நாடாக சீனா உருவாகி வருகிறது. 2021 ஆம் ஆண்டு முதலாக விண்வெளியில் ஆராய்ச்சி மையம் அமைக்கிற திட்டமான தியகொன்க் திட்டத்தை பல்வேறு கட்டங்களாக சீனா செயல்படுத்தி வருகிறது. கடந்த 2021 ஆம் ஆண்டில் விண்வெளி ஆய்வுத் திட்டங்களில் பல்வேறு தொழில்நுட்பங்களை பகிரிந்துகொள்கிற ஒப்பந்தங்களை ரஷ்யாவும் சீனாவும் மேற்கொண்டன. ரஷ்யாவிற்கோ, சீனா சிறந்து விளங்குகிற மின்னணு, கணினி மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் தேவை. இந்த இரு நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர தேவைகள் ரஷ்யாசீனாவின் ஒத்துழைப்பை வலுவாக்கி வருகிறது.


### விண்வெளி சந்தை

புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் ஸ்டான்லி குப்ரிக்கின் சிறந்த படங்களில் ஒன்றான ஸ்பேஸ் ஒடிசியில் ஒரு காட்சி வரும், நிலாவில் முகாம் அமைக்கிற மனிதர்கள், செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்கு நிலவில் இருந்து புறப்படுவார்கள். தற்போது அதிகரித்துவருகிற அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளை கருத்தில் கொண்டு எதிர்கால சமூகம் பற்றி உருவாக்கப்படுகிற இவ்வகையாக அறிவியல் புனைவுக் கதைகள், திரைப்படங்கள் நமது காலத்திலேயே எதார்த்த உண்மையாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அடுத்த இருபது முப்பது ஆண்டுகளில் நிலாவில் ஒரு விண்வெளி முகாம் அமைப்பது, விண்வெளி ஆய்வுகளில் முக்கிய திட்டமாக கருதப்படுகிறது. அடுத்த ஐம்பது ஆண்டுகளில் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்கள் செல்வது, அடுத்த நூறு ஆண்டுகளில் சூரிய மண்டலத்திற்கு அப்பால் உள்ள கோள்களுக்கு செல்வது போன்றவை மனித சமூகத்தின் விண்வெளித் துறை சார்ந்த பொதுவான திட்டமாக உள்ளது.

இந்த திட்டத்தின் நோக்கமானது, தொலை தூரக் கோள்களில் உள்ள கற்களையும் மண்ணையும் சேகரித்து எடுத்து வருவது மட்டுமல்ல. இதற்காக மட்டும் பல லட்சம் கோடி ரூபாய்களை யாரும் செலவு செய்ய முன்வரப் போவதில்லை. அப்படியானால் இத்திட்டத்திற்கான நோக்கம் என்ன?

விண்வெளி யுகத்தின் ஆய்வு நோக்கமும் செயல்திட்டமும் இரண்டு வகைகளில் முக்கியத்தும் பெறுகிறது. முதலாவதாக நாம் வாழ்ந்து வருகிற பூமியானது வேகமாக சூடாகி வருகிறது; தற்போது



அதிகரித்துவருகிற காலநிலை மாற்ற பிரச்சனையானது எதிர்காலத்தில் இன்னும் தீவிரமாகலாம். இன்னும் நூறாண்டுகளில் இந்த பூமியே வாழ்வதற்கு தகுதியற்றதாக மாறுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளது. ஆகவே ‘‘நாம் வாழ்வதற்கு தகுதியான கிரகம் ஒன்றை கண்டுபிடித்தாக வேண்டும். நாம் விண்வெளிக்குள் போகவில்லை என்றால் மனிதகுலத்திற்கு வருங்காலம் என்ற ஒன்றே இருக்காது'' என்பார் புகழ்பெற்ற அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்.

ஸ்டீபன் ஹாக்கிங்கின் விண்வெளி காலனிய மயமாக்கல் ஆர்வத்தையார் எப்படி புரிந்துகொண்டாலும் கார்ப்பரேட்களும் வளர்ந்த ஏகாதிபத்திய நாடுகளும் சரியாக புரிந்துகொண்டுள்ளன.

புதிய கிரகங்களுக்கு ராக்கெட்டுகளை சுமந்து செல்வது, அரிய தனிமங்களை அகழ்ந்து எடுப்பது, விண்வெளி சுற்றுலா செல்வது என விண்வெளி யுகம் பல புதிய சந்தைக்கான திறப்புகளை கொண்டுள்ளது. தற்போது அதிகரித்து வருகிற விண்வெளி ஆய்விற்கான இரண்டாவது நோக்கம் இதுதான்.

### விண்வெளி காலனிய திட்டம்:

பூமிக்கு அப்பால் விண்வெளியில் மனிதர்கள் உடனடியாக காலனியமாக்க நினைக்கிற இடம் நிலவுதான். நிலவில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் கால் பதித்துவிட்டார்கள். நிலவின் மேற்பரப்பில் பல ரோவர் ஊர்திகள் ஊர்ந்து வந்து ஆராய்ச்சி செய்கின்றன. நிலவின் தென்துருவத்தில் உறைந்த நிலையில் தண்ணீர் இருப்பதை இந்த ஆராய்ச்சிகள் உறுதி செய்கின்றன. ஒருவேளை இந்த உறைந்த பனியை நீராக மாற்றி ஆக்சிஜனையும் தண்ணீரையும் உருவாக்கிக் கொண்டால் நிலவில் மனிதர்கள் தங்குவது சாத்தியமாகிவிடும். மின்சார

# னிப்படுத்தப்படுகிற ார்ப்பரேட்களின் புதிய சந்தை

ஆற்றலுக்கு, சூரிய ஒலித்தகடுகளை பயன்படுத்துக் கொள்ளலாம். இத்தகைய அம்சங்களை கவனத்தில் கொண்டே நிலவில் விண்வெளி முகாம் அமைக்கிற திட்டம் எதார்த்த சாத்தியமிக்கதாகத் தெரிகிறது.

நிலவிற்கு அடுத்து, மனிதர்கள் காலனியமாக்க நினைக்கும் இலக்கு செவ்வாய் கிரகம். இங்கு ஆவியான ஏரிகளும் கால்வாய்களும் ஆறுகளும் இருந்துள்ளதை நாசாவின் ஆய்வுகள் உறுதி செய்கின்றன. 1964 ஆம் ஆண்டில் முதல் முதலாக செவ்வாய் கிரகத்தில் மரைனர்4 என்ற ரோவரை தரை இறக்கியது அமெரிக்கா. இந்த ரோவர் மற்றும் இதற்கு அடுத்து அனுப்பப்பட்ட ரோவர் ஊர்தி மூலம் எடுக்கப்பட்ட செவ்வாய் கிரகத்தின் படங்கள் யாவும் பூமியின் பாலைவனத்தை ஒத்துள்ளது. தற்போதைக்கு செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் நீர் இல்லை என்றாலும் ஒரு காலத்தில் அங்கே நீர் இருந்ததற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. அப்படியிருந்தால் அங்கு உயிரினங்கள் தோன்றியிருப்பதற்கான சாத்தியங்களையும் மறுப்பதற்கில்லை.

நிலவு மற்றும் செவ்வாய் கிரகத்திற்கு அடுத்து, மனிதர்கள் ஆர்வம் செலுத்துகிற பிற கோள்கள் முறையே சனி மற்றும் வியாழன் கிரகத்தின் நிலவுகள் ஆகும். சனி கிரகத்தைப் பொறுத்தவரை அங்கு உறுதியான மேற்பரப்பு கிடையாது; ஆகவே மனிதர்கள் குடியேறுவது சிரமம். சனியைப் போலவே வியாழன் கிரகமும் வாயுக்களால் ஆனதால், இந்த கிரகத்திற்கும் உறுதியான மேற்பரப்பு



கிடையாது. ஆனால் வியாழன் கிரகத்தின் நிலவுகளில் ஒன்றான யூரோப்போ மற்றும் சனி கிரகத்தின் நிலவுகளில் ஒன்றான என்செலடஸ் (Enceladus) மேற்பரப்பானது உறுதியான உறைந்த பனிக்கட்டிகளைக் கொண்டிருக்கின்றது. அண்மையில் “என்செலடஸ்” நிலவை ஆய்வு செய்ய நாசா அனுப்பிய கசினி ஆய்வுக் களமானது, பனிப் பந்து போன்று தோற்றமுடைய என்செலடசின் பேற்பரப்பில் பனிப் பாறை பள்ளத்தாக்குகளையும் துருவத்தில் நீருற்றுகளையும் சனியின் நிலவை சிறப்பாக படங்கள் எடுத்து அனுப்பியது. மேலும் உறைந்த பனிக்கடியில் பாஸ்பரஸ் இருப்பதையும் கசினி கண்டறிந்துள்ளது. இது விஞ்ஞானிகளிடம் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் உயிரினங்கள் தோன்றுவதற்கு பாஸ்பரஸ் முக்கியான தனிமம் ஆகும். அதுவம் பனிப்பாறைக்கு அடியில் பாஸ்பரஸ் உள்ளதென்றால் நிச்சயம் அந்த நீரில் உயிர்கள் தோன்றியிருப்பதற்கான சாத்தியம் அதிகம் என்றே விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

### தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களும் விண்வெளி ஆய்வுகளும்

15 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவை கொலம்பஸ் கண்டறிந்தது வரலாற்றில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. விண்வெளித்துறையில் இன்று நடைபெறுகிற ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் அமெரிக்காவை கொலம்பஸ் கண்டறிந்ததற்கு நிகாரனதாக இருக்கும் என்பார் அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங். நிலவு, செவ்வாய் கிரகம், வியாழன் மற்றும் சனியின் நிலவுகள் ஆகியவை மனிதர்களின் இப்போதைய விண்வெளி காலனியமாக்கலின் முதன்மை இலக்குகளாக உள்ளன. இந்த திட்டத்தில் அமெரிக்காவின் நாசா போன்ற பொதுத்துறை நிறுவனம் மட்டுமல்லாமல் உலகில் பெரும் பணக்கார்கள் விண்வெளி ஆய்வுகளில் பெரும் ஆர்வமும் முதலீடும் செய்து வருகின்றனர். உதாரணமாக நிலவுக்கும் செவ்வாய் கிரகத்திற்கும் மனிதர்களை அனுப்புகிற திட்டத்தை ஸ்பேஸ்–Xநிறுவன தலைவர் எலன் மாஸ்க் அறிவித்துள்ளார். அதுபோல ரஷ்யாவின் மிகப்பெரும் கார்ப்பரேட் தொழில் அதிபர் யூரி மில்னர் மற்றும் மார்க் சூகர்பெர்க் ஆகியோர் இணைந்து “ப்ரேக் த்ரோ ஸ்டார் ஷாட்” எனும் விண்வெளி ஆய்வுத் திட்டத்தை தொடங்கி நடத்தி வருகிறார்கள். இந்த திட்டத்தின் நோக்கமானது பூமிக்கு அப்பால் உள்ள கோள்களில் உயிர் வாழ்வதற்கான சாத்தியத்தை ஆராய்வது மற்றும் சூரிய மண்டலத்திற்கு அப்பால் பூமி போன்ற கிரகத்தை கண்டறிவது ஆகும். தற்போது இந்த முயற்சி நம்ப முடியாததாக இருக்கலாம். ஆனால் சாத்தியமற்றது என ஒதுக்க இயலாது.

இன்று அலைபேசியின் வருகையானது தொலைத்தொடர்பு துறையில் பெரிய பாய்ச்சலை நிகழ்த்திவிட்டது. கையடக்க தொடு திரையில் பல லட்சம் ரூபாய் வர்த்தகப் பணப்பரிமாற்றம் நிகழ்கிறது. கண்டம்விட்டு கண்டம் வீடியோ கான்பரன்ஸ் முறையில் பேச முடிகிறது. இருபது வருடங்களுக்கு முன்பு வரை நாம் யாரும் இதை நினைத்து பார்த்திருக்க மாட்டோம். இதுபோன்றே அதிவேக ரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து வசதிகள் நமது பயண நேரத்தை குறைத்து தொலை தூர பயணங்களை சர்வ சாதாரனமாக்கி விட்டது. இன்று நாம் அனுபவிக்கின்ற அறிவியல் தொழில்நுட்ப வசதிகள் யாவையும் கடந்த காலத்தில் மன்னர்கள் கூட அனுபவிக்காத சௌகரியங்கள் ஆகும். காலந்தோறும் அதிகரித்து வருகிற இத்தகைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியானது தற்போது நம்மை விண்வெளி யுகத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறது. ஆனால் இதற்கு நாம் பெரிய விலை கொடுக்கபோகிறோம் என்பதையும் இந்த விண்வெளி யுகத்தில் பெரும் கார்பரேட்களே பெரும் பலனடையப் போகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எப்படி ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளை சுமார் நூறாண்டு காலத்திற்கு மேலான சந்தையாக கிழக்கிந்திய கம்பெனிகளும் ஏகாதிபத்திய நாடுகளும் பயன்படுத்தி எப்படி வளங்களைக் குவித்தனவோ அதுபோன்றோதொரு நிலைமை இன்று வேறொரு வரலாற்றுக் கட்டத்தில், வேறொரு வடிவத்தில் மீண்டும் வருகிறது. விண்வெளி சாதனைகள் நமது பெருமைகளை பறைசாற்றிக் கொள்வதற்கு மட்டுமல்ல என்பதையும் விண்வெளி சாதானைகள், விண்வெளி சந்தையுடன் இணைக்கப்பட்டு, பெரும் கார்ப்பரேட் வர்த்தக நலன்களுக்கு சேவை செய்ய உள்ளதையும் நாம் இங்கே மறந்துவிடக் கூடாது.

தொடர்புக்கு : 9842391963

## செபியில் அதானியின் மருமகன்



இந்தியாவின் உள் வர்த்தகக் குற்றங்களைக் கவனிக்கும் செபியின் கார்ப்பரேட் நிர்வாகக்குழுவில், சிரில்ஷரஃப் என்பவர் உறுப்பினராகவுள்ளார்! இவர் எப்படி அந்த இடத்திற்கு வந்தார்? இவர் அதானியின் மருமகள்!

பங்குசந்தை ஒழுங்குமுறைகளில் அவ்வப்போது செபி கொண்டுவந்த திருத்தங்களால், அதானி குழுமத்திற்கு பலன் கிடைத்துள்ளது! இதன் மூலம், அதானி குழுமத்தின் ஒழுங்குமுறை மீறல்கள் மற்றும் மோசடிகள், கண்டறியப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது! இது குறித்து மனுதாரர் அனாமிகா ஜெய்ஸ்வால், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளது கருதிப் பார்க்கத்தக்கது! மோசடிகளின் முகத்திரைகள் உச்சநீதிமன்றத்தில் கிழிபடும்!

– கே.சுப்பராயன் எம்.பி.

தனது தண்ணீரை குடித்ததற்காக

## தலித் மாணவன் மீது ஆசிரியர் கொடும் தாக்குதல்

ராஜஸ்தான் மாநிலம் பரத்பூர் மாவட்டம் பயான நகர் பகுதியில் அரசுப் பள்ளி ஒன்றில் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி ஊழியர்களுக்கு வைக்கப்பட்டிருந்த தண்ணீரை ஏழாம் வகுப்பு படிக்கும் தலித் மாணவன் குடித்து விட்டான். இதற்காக ஆசிரியர் கங்காராம் குர்ஜா அந்த மாணவன் மீது கடுமையாக தாக்குதல் நடத்தியுள்ளார் இதனால் இந்த மாணவனுக்கு முதுகுப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது காயமடைந்த மாணவனின் உறவினர்கள் பள்ளிக்கு முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் மீது கொடுக்கப்பட்ட புகாரை வாபஸ் பெறுவதற்காக இரண்டு லட்சம் ரூபாய் நேரம் பேசப்பட்டது இதை ஏற்காவிட்டால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ஆசிரியர் மிரட்டியுள்ளார்.

## உ.பி.யில் தலித் பெண் மீது பாலியல் வன்கொடுமை!



பாஜக ஆளும் உத்தரப்பிரதேசத்தில் பரேலி மாவட்டத்தில் தலித் பெண் தனது தோழி மூலம் கடன் வாங்கியுள்ளார். அதனை திருப்பிக் கொடுக்க காலதாமதம் ஆனதால் கடன் கொடுத்த வரை நேரில் சந்திக்க ஹோட்டலுக்கு அந்தப் பெண்ணை அழைத்துச் சென்றுள்ளார் தோழி.

ஹோட்டலில் வைத்து கடன் கொடுத்தவரும் அவரோடு மேலும் இருவரும் சேர்ந்து பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்ததுடன் பச்சையாக உள்ள இறைச்சிய உண்ணுமாறு கொடுமைப்படுத்தியுள்ளனர் மேலும் இந்த நிகழ்ச்சியை வீடியோ எடுத்து அந்தப் பெண்ணிடம் காட்டி ஐந்து லட்சம் தருமாறு மிரட்டி உள்ளனர

தோழி உட்பட மூணு பேர் மீதும் அன்புடைமைச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

## உ.பி.யில் மகனின் பிணத்தை தள்ளு வண்டியில் கொண்டு சென்ற தாய்!

உத்திர பிரதேசம் சாமியார் ஆட்சியில் மீரட் பகுதியைச் சார்ந்த ராஜு என்பவர் நடுரோட்டில் இறந்து கிடந்தார். அவரது தாயும் சகோதரரும் இறந்தவர் உடலை சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல வாகன உதவியை நாடினர் பல மணி நேரம் கடந்தும் வாகனம் கிடைக்கவில்லை.

இதனால் ஒரு தள்ளு வண்டியை எடுத்து வந்து அதில் இறந்தவரின் உடலை ஏற்றி சுடுகாட்டுக்கு கொண்டு சென்றனர். இந்த காட்சி பதிவு சமூக ஊடகங்களில் வைரல் ஆகிவிட்டது இதைத்தொடர்ந்து மீரட் மருத்துவக் கல்லூரி முதல்வர் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

தலைகீழாக தொங்கவிட்டு

## தலித் இளைஞர்களை அடித்து சிறுநீர் கழித்த கொடுமை!

மும்பையில் தலித் இளைஞர் மற்றும் மூன்று சிறுவர்கள் அடித்து துன்புறுத்தப்பட்டுள்ளனர். இதில் தலித் இளைஞரை தலைகீழாக தொங்கவிட்டு அடித்து கொடுமைப்படுத்தி அவர் மீது சிறுநீர் கழித்தனர்

பப்பு பார்க்கே, ராஜு போர்கே, யுவராஜ் கொண்டே, மற்றும் நானா பாட்டி ஆகியோர் இந்தக் கொடுமையை செய்தனர். இந்தக் கொடூர நிகழ்வு யுவராஜ் கலண்டே வீட்டில் முன்பு நடைபெற்ற காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்டது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் மூவர் தப்பி ஓடிவிட்டனர்.

## அதானி மீதான வழக்கில் செபி மீதும் உச்ச நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு!

சட்டவிரோத பணப் பங்குவர்த்தனை பங்கு விலை மோசடி தொடர்பாக அதானி குழும நிறுவனங்கள் மீது அமெரிக்க நிதி ஆய்வு நிறுவனமான ஹிண்டன் பார்க் குற்றம் சாட்டியது.

இது தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பங்குச்சந்தை ஒழுங்காற்று வாரியம் செவிக்கு உச்சநீதிமன்றம் உத்திரவிட்டது.

இதில் அதானி குழுமத்திற்கு எதிராக 24 விவகாரங்களில் இரண்டு விவகாரங்களில் மட்டுமே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் வழக்கில் சம்பந்தப்பட்ட மனுதாரர்களில் ஒருவர் அனாமிகா ஜஸ்வால் என்பவர் நீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளார் சந்தை விலைக்கு மாறாக சரக்குகளை அதிக விலைக்கு வாங்கியதாக அதானி குடும்பம் கணக்கு காட்டி உள்ளது.

இந்த விவகாரத்தில் முக்கிய பல்கலை செபி நிறுவனம் உச்ச நீதிமன்றத்திடம் மறைத்துள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் இ ஆர் ஐ அனுப்பிய எச்சரிக்கை மீதம் நடவடிக்கை எடுக்காமல் செபி இருந்துவிட்டது.

இதற்கெல்லாம் காரணம் செபி அமைப்பின் நிர்வாக குழுவில் உறுப்பினராக இருந்த சிரில் ஷரப் என்பவர் அதானியின் மருமகன் ஆவார் என்றும் தனது குற்றச்சாட்டில் கூறியுள்ளார்.

# சமூக நல்லிணக்கம் பேணுவதில் அக்கறையில்லாத பிரதமர் மோடி

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

சமூக வாழ்வில் நல்லிணக்கம் பேணுவதில் அக்கறை காட்ட வேண்டிய பிரதமர் மோடி, அதற்கு எதிராகப் பேசி வருவதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

மத்திய பிரதேசத்தில் நடந்த அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிரதமர் நரேந்திர மோடி, "சனாதனத்தை ஒழிக்கும் முயற்சியில் எதிர்கட்சிகள் ஈடுபட்டுள்ளதாக" குற்றம்சாட்டியுள்ளார். பிரதமரின் பேச்சு சனாதன சம்பிரதாய நடைமுறைகள் மீது நம்பிக்கை கொண்ட மக்களுக்கு மதவெறியூட்டும், அவரது மலிவான நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் மீது தான் ஏற்றுக்கொண்ட உறுதிமொழியை பிரதமர் காற்றில் பறக்க விட்டுள்ளார். சமய நம்பிக்கை என்பது மனிதர்களின் தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது. ஒருவர் எந்த ஒரு சமயத்தையும் தேர்வு செய்து, அதனை வழிபட்டு வருவதற்கு நமது அரசியல் அமைப்பு சட்டம் பாதுகாப்பளிக்கிறது. ஆனால் அரசு எந்த மதத்தையும் சாராத, மதச்சார்பற்ற பண்பினை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வர வேண்டும் என வழிகாட்டுகிறது. பிரதமர் பொறுப்பு ஏற்கும் முன்பு சட்டப்படி ஏற்றுக்கொண்ட உறுதிமொழிக்கும், ரகசிய காப்புப் பிரமாணத்துக்கும் மாறாக பிரதமர் அரசு நிகழ்ச்சியை கட்சி அரசியல் பரப்புரை மேடையாக்கி, எதிர்க்கட்சிகள் மீது பழி சுமத்துவது அவரது பொறுப்புக்கு உகந்த செயலாகாது.

கடந்த ஜூலை மாதம் பீகார் தலைநகரில் தொடங்கிய எதிர்கட்சிகள் ஒற்றுமை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் வலுப்பெற்று, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெறும் என்பது உறுதியாகி வருகிறது. பாஜக ஒன்றிய அரசுக்கு எதிராகவும், ஆர்எஸ்எஸ், பாஜக பரிவாரங்களின் கும்பல் கலாச்சாரத்துக்கு எதிராகவும் கடந்த பத்தாண்டுகளில் இல்லாத எதிர்ப்பு உருவாகி இருப்பதால், மக்களின் கவனத்தை திசைதிருப்பி விடும் நோக்கில், சனாதன நம்பிக்கையாளர்களை "இண்டியா" கூட்டணிக்கு எதிராகத் தூண்டி விடும் பிரதமர் மோடியின் செயலை நாட்டு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

அண்மையில் ஜி20 உச்சி மாநாட்டுக்கு "ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்" என்ற கருப்பொருள் வழங்கியதாகப் பெருமைப்பட்ட பிரதமர், இந்தியாவில் மக்கள் அனைவரும் சமமான உரிமைகளுடன் வேறுபாடு இல்லாமல் வாழ்ந்து வருவதாக பேசினார். ஆனால் இங்கு சமூகத்தை பிளவுபடுத்தும் சனாதனத்தை பாதுகாக்க சூளுரைக்கிறார். நாட்டின் பிரதமர் இரட்டை நாக்கில் பேசுவதை நாட்டு மக்கள் ஏற்க மாட்டார்கள் என்பதை வரும் தேர்தலில் மக்கள் தீர்ப்பு வெளிப்படுத்தும். சமூக வாழ்வில் நல்லிணக்கம் பேணுவதில் அக்கறை காட்ட வேண்டிய பிரதமர் மோடி, அதற்கு எதிராக பேசி வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது என கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது அணி என்றால் அது பிஜேபியின் பினாமியே

## பினாய் விஸ்வம் எம்.பி. பேட்டி



அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக, தெலுங்கானா முதல்வரும், பிஆர்எஸ் தலைவருமான கே .சந்திரசேகர் ராவ் தலைமையிலான மூன்றாவது அணி அமைக்க வேண்டும் என்று ஏஐஎம்ஐஎம் தலைவர் அசாதுதீன் ஒவைசி முன்மொழிந்துள்ளார். "அப்படியொரு அணி உருவாகவே முடியாது" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பினாய் விஸ்வம் எம்.பி. கூறினார்.

2024ம் ஆண்டு நடைபெறும் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்டிஏ) தோற்கும் என்பது வேறு யாரையும் விட பாஜகவுக்கு நன்றாகத் தெரியும் என்றார் அவர்.

ஏஎன்ஐ செய்தி நிறுவனத்திடம் பேசிய விஸ்வம், ஹரியானாவின் நூஹ் மாவட்டத்தில் நடந்த மோதல்கள் பாஜக மற்றும் அதன் கருத்தியல் பெற்றோரான ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கம் (ஆர்எஸ்எஸ்) மூலம் திட்டமிடப்பட்டது என்பது மக்களுக்கு ஏற்கனவே தெரியும்.

"கலவரத்தில் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரம் குறிவைக்கப்பட்டது. கடைகள் மற்றும் பிற வணிக நிறுவனங்கள் பாஜக ஆதரவுடன் குண்டர்கள் மற்றும் குற்றவாளிகளால் தாக்கப்பட்டன. ஹரியானாவில் பாஜக அரசுதான் மோதல்களையும் வன்முறையையும் அரசியல் ஆக்கியது" என்று அவர் கூறினார்.

ஜூலை31 அன்று நடந்த மத ஊர்வலத்தின் போது நூஹ் மாவட்டத்தில் வன்முறை வெடித்தது. குருகிராமில் 6 பேர் கொல்லப்பட்டனர். ஒரு மதகுரு இறந்தார்.

அடுத்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சி இடத்தைப் பிடிக்க மூன்றாவது அணி போட்டியிடுவதற்கான சாத்தியக்கூறுகளை விஸ்வம் நிராகரித்தார். "மூன்றாம் அணி இருக்க முடியாது. 2024க்கான போட்டி என்டிஏ மற்றும் இந்தியா (இந்திய தேசிய வளர்ச்சியை உள்ளடக்கிய கூட்டணி) இடையே இருக்கும். மூன்றாவது அணி என்பது பிஜேபியின் பினாமியாகத்தான் இருக்கும். அதற்கான நிதி உதவியும், ஆதரவும் காவிப்படைகளால் தரப்படும். தோற்கப் போகிறோம் என்பது பாஜகவுக்குத் தெரியும். அவர்கள் உறுதியாகத் தோற்கடிக்கப்படுவார்கள்."


காங்கிரஸ் ஆளும் கர்நாடகாவில் பிஜேபி மற்றும் ஜேடி(எஸ்) கட்சிகள் கூட்டணி அமைக்கலாம் என்ற ஊகங்கள் வருகின்றன. காவி கட்சியுடன் கூட்டணி அமைக்க கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ஹெச்.டி.தேவேகவுடாவைத் தவிர வேறு யாரும் முன்வரவில்லை.

கிரிக்கெட் போட்டிகளில் நடனமாடி உற்சாகப்படுத்தும் சியர் லீடர்ஸ்

போல, தேவே கவுடாஜி பாஜகவுக்கு உற்சாகமூட்டும் நபராக தன்னை மாற்றிக் கொண்டார். தனது அரசியல் செல்வாக்கை பிஜேபிக்கான ஆதரவாக்கிட முயல்கிறார். அவரது அரசியல் வாழ்க்கையின் இந்த கட்டத்தில், உயர்நிலை வாய்த்த அந்த தலைவர், காவி அணிக்குள் குதிக்கத் தீர்மானித்தது துரதிர்ஷ்டவசமானது" என்றார் அவர்.

**தமிழில் டிஎம்மூர்த்தி**

# சாதனை நாயகன் மொகமது சிராஜ்



ஆசியக் கோப்பை இறுதிப் போட்டியில் இலங்கையை வீழ்த்தி எட்டாவது முறையாகக் கோப்பையைக் கைப்பற்றி உள்ளது இந்தியக் கிரிக்கெட் அணி. ஆட்ட நாயகன் பந்து வீச்சாளர் மொஹமத் சிராஜ்.

சிராஜ் தனது நான்காவது ஓவரில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தியதுதான் இந்த இறுதிப் போட்டியின் முக்கிய அம்சம். மொத்தம் 21 ரன்களை மட்டுமே கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் இந்தியா இலங்கையை 15.2 ஓவர்களில் வெறும் 50 ரன்களில் சுருட்ட முடிந்தது. எனவே இரண்டாவதாக பேட்டிங் செய்த இந்திய அணிக்கு வெற்றிக்கான இலக்கு மிகவும் எளிதாகியது. வெற்றி கிட்டியது.

ஆட்டத்தில் மட்டுமல்ல. எந்த ஆட்டக்காரரும் செய்யாத ஒன்றை செய்திருக்கிறார் இந்த இந்திய கிரிக்கெட் வீரர்.

தனது அபாரமான கோப்பையை வெல்லும் பந்து வீச்சிற்காக வெகுமதியாகக் கிடைத்த ஆசியக் கோப்பையின் இறுதி ஆட்டக்காரர் பரிசான 5,000 அமெரிக்க டாலர்களை (இந்திய நாணய மதிப்பில் 4,16,450 ரூபாய்) இலங்கை ஆடுகளத்தின் மைதான ஊழியர்களுக்கு வழங்கியுள்ளார். அவர்களுடைய அயராத கடும் உழைப்பே இறுதி ஆட்டம் நடைபெறுவதை சாத்தியப்படுத்தியது என்கிறார் சிராஜ்.

அனேகமாக கிரிக்கெட் வரலாற்றிலேயே மைதானத் தொழிலாளர்களின் அரும்பணியை அங்கீகரித்துத் தனக்குக் கிடைத்த பரிசுத் தொகையை முழுதும் கொடுத்து பாராட்டியவர் சிராஜ் ஒருவராகத்தான் இருக்க முடியும்.

இந்திய கிரிக்கெட் அணிக்குப் பாராட்டுக்கள் குவிகின்றன. அதற்கு முக்கிய காரணமான மொகமது சிராஜை கொண்டாட 'பாரதம்' தயங்குவது ஏன் என சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

**– ஆனந்த் பாசு**

# டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் கருத்தரங்கம்



டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் 38,000 க்கும் மேற்பட்ட டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு உடனடியாக பணி பாதுகாப்பு வழங்க வேண்டும் .

தினக் கூலி என்பதற்குப் பதிலாக, மாத ஊதிய வழங்கிடவேண்டும். குறைந்த பட்ச மாத ஊதியமாக ரூ 21,000 வழங்கிட வேண்டும்.

பல ஊராட்சி ,நகராட்சி ,மாநகராட்சி உள்ளிட்ட அமைப்புகளில் பணிபுரியும் இந்த கொசு ஒழிப்பு ஊழியர்களுக்கு, சம வேலைக்கு சம ஊதியம. வழங்கிட வேண்டும். பணிநிரந்தரம் வழங்கிட வேண்டும். மேற்கண்ட இக்கோரிக்கைகளை வலியுறுத்தி ...

சென்னையில் ஆஷா நிவாஷ் அரங்கில் கருத்தரங்கம் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் கே.ஜெயவேலு தலைமை தாங்கினார்.

செயலாளர் ஏ.சதீஷ் வரவேற்றார்.

வழக்கறிஞர் நடராஜன் கருத்தரங்கை தொடங்கிவைத்தார்.

கோரிக்கைகளை விளக்கி,மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி விளக்கி,விளக்க உரையாற்றினார்.

எம்.ஆர்.பி கோவிட் செவிலியர் சங்கத்தின் துணைத்தலைவர் ஜி.உதயக்குமார், ஆர்.சி.எச் தூய்மை பணியாளர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் நிலாஒளி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் நிறைவு உரையாற்றினார்.

இக் கருத்தரங்கில் 300 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மாவட்ட கட்டட தொழிலாளர் சங்கத்தின்

# மாவட்ட அலுவலகம் திறப்பு விழா

நாமக்கல் மாவட்ட தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட அலுவலகம் திறப்பு விழா மாணிக்கம்பாளையம் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது. கட்டட சங்க மாவட்ட செயலாளர் ஏ.குமார் தலைமை வகித்தார்.

கட்டட சங்க மாவட்ட துணை தலைவர் எம்.நடேசன் மற்றும் மாவட்ட பொருளாளர் ஜி.முருகேசன் ஆகியோர் முன்னிலையில் கட்டட சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.கோபிராஜ் வரவேற்று பேசினார்.

ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் பெயர் பலகை திறந்து வைத்து வாழ்த்தி பேசினார். ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன் அலுவலகத்தை திறந்து வைத்து வாழ்த்தி பேசினார்.



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் க.அன்புமணி, வி.தொ.ச. மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். கட்டட சங்க மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.மாரியம்மாள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## ஏஐடியுசி மூத்த தலைவர் த.சுந்தர்ராஜன் மறைவு



### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

மூத்த தொழிற்சங்கத் தலைவர் த.சுந்தர்ராஜன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மூத்த தொழிற்சங்கத் தலைவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினருமான த.சுந்தர்ராஜன் (வயது 77) 18.07.2023 அன்று காலமானார்.

தேனி மாவட்டம், சின்னமனூரில் விவசாயக் குடும்பத்தில் தங்கமுத்து கிருஷ்ணம்மாள் தம்பதியினரின் மகனாக 1947 டிசம்பர் 12ஆம் தேதி பிறந்தவர். மின்வாரியத்தில் பல்வேறு பகுதிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மின்வாரியத் தொழிலாளர்களை சங்க அமைப்பில் அணி திரட்டியது மட்டுமின்றி அவர் பணிபுரிந்த மாவட்டங்களில் எல்லாம் பிற தொழில்களிலும் ஏஐடியுசி தொழிற்சங்கங்களை அமைத்தவர்.

தொழிலாளர் நலச் சட்டங்களை கற்றுத் தேர்ந்துநிபுணத்துவம் பெற்றவர். தொழிலாளர் நீதிமன்றங்களில் நேரடியாக ஆஜராகி வாதிட்டு வெற்றி தேடி தந்தவர். சிக்கலான வழக்குகளில் உயர்நீதிமன்றத்துக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் கூட மனுக்களை தயாரித்து தரும் திறன் வாய்ந்தவர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றுபட்ட மதுரை மாவட்டக் குழு உறுப்பினர், பின்னர் தேனி மாவட்ட செயற்குழு உறுப்பினர், மாநிலக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்பாக செயல்பட்டவர். மார்க்சிய சித்தாந்தத்தில் ஆழ்ந்த ஞானம் கொண்டவர். தத்துவப் பிடிப்பும், அரசியல் தெளிவும் கொண்ட த.சுந்தர்ராஜன் எடுத்த முடிவை செயல்படுத்துவதில் பிடிவாதக்காரர். இளைஞர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஆசிரியராக விளங்கியவர். அவரது இழப்பு எளிதில் ஈடுசெய்ய இயலாத பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரைப் பிரிந்துவாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் உள்ளிட்டோருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் தெரிவித்துள்ளார்.

மறைந்த தோழர்.த.சுந்தர்ராஜனுக்கு மனைவி தங்கம், கிருஷ்ணா, சத்தியா என்ற மகள்களும், ஜீவபாரதி என்ற மகனும் உள்ளனர்.

மறைந்த சுந்தரராஜன் உடல் மீது செங்கொடி போர்த்தி, மலர் வளையம் வைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, மாவட்டச் செயலாளர் பெருமாள், ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் ம.ராதாகிருஷ்ணன், செயலாளர் ஏ.பாஸ்கர், தேனி மாவட்ட செயலாளர் ராஜ் குமார், இளைஞர் பெருமன்ற மாநிலத் துணைச் செயலாளர் தமிழ்ப்பெருமாள் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

## மூத்த தலைவர் த.சுந்தரராஜன் மறைவுக்கு தமிழ்நாடு ஏஐடியுசி அஞ்சலி

தொழிற்சங்க இயக்கத்தின் முதுபெரும் தலைவர். ஏஐடியுசி முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் டி. எஸ். என்று தோழர்களால் அன்போடு அழைக்கப்படும் த. சுந்தரராஜன் காலமானார். இறுதி அஞ் சலி நிகழ்வு அவரது தேனி மாவட்டம் சின்னமனூரில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.தமிழ் நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனத்தின் முன்னணி தலைவர், தமிழ்நாடு ஏஐடியுசி துணைத் தலைவர், தேனி மாவட்ட செயலாளர், உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றினார். நீலகிரி, தேனி மாவட்டங்களில் பல்வேறு தொழிற்சங்கங்கள் உருவாக்கி அவற்றை வளர்த்தெடுப்பதில் முதன்மை பங்கு வகித்தவர்.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல், தத்துவம், சட்டங்கள் நன்கு அறிந்தவர். தொழிலாளர் நீதி மன்றங்களில் பல்வேறு வழக்குகள் நடத்தி வெற்றிகள் பல பெற்றவர்.

தமிழ்நாடு ஏஐடியுசி 18 ஆவது மாநாட்டை தேனியில் மிகச்சிறப்பாக முன்நின்று நடத்தினார். வாழ்நாள் போராளி, கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக தனக்கு ஏற்பட்ட உடல் நலக்குறைவை எதிர்த்து பிடிவாதமாக, உறுதியாக போராடினார்.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மூளையின் செயல்பாடு பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தார். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள், தோழர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு ஏஐடியுசி சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரி வித்துக் கொள்கிறோம். இவ்வாறு தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## காமராஜ் நகர் நீராத்திலிங்கம் மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்ட முன்னணி செயல்பாட்டாளர், பி.நீராத்திலிங்கம் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையடைந்தோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் காமராஜ் நகரில் பிறந்த பி.நீராத்திலிங்கம் இளம் வயதிலேயே கம்யூனிஸ்டு கட்சியால் ஈர்க்கப்பட்டு, அதில் இணைந்து பணியாற்றியவர். கட்சி நடத்திய இயக்கங்களிலும், போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

பாரத் பந்த் (முழு அடைப்பு) போராட்டத்தில் கலந்து கொண்டு கடுமையான அடக்குமுறையை எதிர் கொண்டவர். சிறை சென்றவர். நீதிபதி முன்பு காவல்துறையின் அத்துமீறலை உரத்த குரலில் வெளிப்படுத்தியவர். தென்காசி நாடாளுமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினர் பொ.லிங்கம் இவரது மூத்த சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலமான நீராத்திலிங்கத்திற்கு மனைவி காளியம்மாள், இரண்டு மகன்கள், நான்கு மகள்கள் இருக்கின்றனர்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை பிரிந்து வாடும் அவரது மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### புதிய குற்றவியல் சட்ட வரைவு மசோதாக்களுக்கு எதிராக

# சென்னையில் வழக்கறிஞர்கள் பேரணி

பாரதிய நாகரிக் சுரக் சன்ஹிதா2023, பாரதிய நியாயா சன்ஹிதா2023 மற்றும் பாரதிய சாக்ஷியா2023 ஆகிய மூன்று மசோதாகள் கடந்த ஆகஸ்ட்11ஆம் தேதி மக்களவையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்திய தண்டனைச் சட்டம்1860, குற்றவியல் நடைமுறை சட்டம்1898 மற்றும் இந்திய சாட்சிகள் சட்டம்1872 ஆகிய சட்டங்களுக்கு மாற்றாக மேற்படி மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவால் அறிமுகம் செய்யப்பட்டு நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டங்கள் ஆங்கிலேய காலனி ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்களாகும். காலனி ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட சட்டம் என்பதால் அவற்றை சீர்திருத்தம் செய்யும் நோக்கில் புதிய மசோதா தாக்கல் செய்வதாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா மக்களவையில் தெரிவித்துள்ளார்.

பல மொழிகள் பேசும் மக்களும், பல தேசிய இனங்களை சேர்ந்தவர்களும் இந்திய நாட்டில் வாழ்ந்து வரும் நிலையில், ஒன்றிய அரசு மூன்று மசோதாக்களுக்கும் இந்தி மற்றும் சமஸ்கிருதத்தில் பெயரிடுவது பாஜக அரசின் அப்பட்டமான இந்தி மற்றும் சமஸ்கிருத திணிப்பு நடவடிக்கையாகும். காலனி ஆதிக்க சிந்தனையை ஒழிப்பதாக சொல்லி அதற்கு மாற்றாக இந்தி மற்றும் சமஸ்கிருத மொழி ஆதிக்கத்தை பிஜேபி தலைமையிலான ஒன்றிய அரசு திணிக்கிறது.

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிமுகப்படுத்தியுள்ள மூன்று மசோதாக்களில் உள்ள சரத்துக்கள் அனைத்தும் ஆங்கில மொழியில் இருக்கும்




நிலையில், மசோதாவிற்கு இந்தி மற்றும் சமஸ்கிருதத்தில் பெயரிடும் நடவடிக்கை கேலிக்கூத்தாக உள்ளது. இதே நிலையில் இதே பெயரோடு மூன்று மசோதாக்களும் சட்டமாக நிறைவேற்றப்பட்டால், இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள மக்களுக்கும், வழக்காடிகளுக்கும், வழக்கறிஞர்களுக்கும், நீதிபதிகளுக்கும் புரியாத ஒரு மொழியில் சட்டத்தின் பெயரை திணிக்கும் நடவடிக்கையாகவே அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் சரத்து 348ன் படி ஒன்றிய அரசால் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் மற்றும் சட்டங்கள் அனைத்தும் ஆங்கில மொழி யிலேயே இருக்க வேண்டும் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் அறியப்படும் சட்டத்தின் பெயர்கள் இந்தியாவில் அந்தந்த மாநில அலுவல் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மிஸிபீவீணீஸீ ஜீமீஸீணீறீ நீஷீபீமீ என்பது இந்திய தண்டனை சட்டம் என்றும், மிஸிபீவீணீஸீ மீஸ்வீபீமீஸீநீமீ கிநீமீ என்பது இந்திய சாட்சிய சட்டம் என்றும், சிஷீபீமீ ஷீயீ சிக்ஷீவீனீவீஸீணீறீ றிக்ஷீஷீநீமீபீஹக்ஷீமீ என்பது குற்றவியல் நடைமுறை சட்டம் என்றும் தமிழ்நாட்டின் அலுவல் மொழியில் பயன்பாட்டில் உள்ளது.

ஆனால் இங்கு புதிய சட்டங்களை, எந்த மொழியில் எழுதினாலும், இந்தி, சம்ஸ்கிருத சொற்களிலேயே அமையும் வகையில் முன்வைக்கப்பட்டு இருப்பது, வழக்கறிஞர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

சட்டங்களை மாற்றி அமைக்கும் இந்த மூன்று மசோதாக்கள் குறித்து வழக்கறிஞர்கள், வழக்கறிஞர் சங்கங்கள், பார்கவுன்சில் யாரிடமும் கருத்து கேட்காமல், எதேச்சதிகாரமாக ஒன்றிய அரசு மக்களவையில் முன்வைத்து நாடாளுமன்ற நிலைக் குழுவிற்கு அனுப்பி இருப்பது ஜனநாயக விரோத நடவடிக்கையாகும் என குடிமைச் சமூகமும், அரசியல் கட்சிகளும், வழக்கறிஞர்கள் அமைப்புகளும் கண்டித்துள்ளதோடு, அவற்றை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. இந்த மூன்று மசோதாக்களை எதிர்த்து தமிழகம் முழுவதும் வழக்கறிஞர்கள் தொடர் போராட்டங்களையும் நீதிமன்ற புறக்கணிப்பையும் நடத்தி வருகிறார்கள்.

இப்போராட்டங்களின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டுக்குழு சார்பில் மூன்று சட்ட மசோதாக்களையும் உடனே திரும்பப்பெற வேண்டும் என்றும், தமிழகத்தில் உள்ள கிழமை நீதிமன்றங்களில் இ்ஃபைலிங் முறையை தற்பொழுது உள்ள சூழ்நிலையில் கட்டாயமாக்க கூடாது என்றும் வலியுறுத்தி கடந்த 15.09.2023 அன்று சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் இருந்து வழக்கறிஞர்கள் பேரணி புறப்பட்டது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டுக் குழு தலைவர் பி.நந்தகுமார் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் கே.பன்னீர்செல்வம், பொருளாளர் டி.ரவி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் (ஐஏஎல்) முன்னணி நிர்வாகிகள் வி.கே.சுப்பிரமணியன் மு.அ.பாரதி, ப.மா. பாலமுருகன், கே.ஆர்.ராமமூர்த்தி, நாகை கோ.பாண்டியன், திருத்துறைப்பூண்டி அருட்செல்வன், புதுக்கோட்டை லோகநாதன், தர்மபுரி வெங்கடேஷ், கும்பகோணம் ஐ.ஜார்ஜ், நாமக்கல் கார்த்திகேயன், கோவை சக்திவேல், தர்மபுரி வெங்கடேஷ் உள்ளிட்டோர் பங்கேற்று உரையாற்றினர். போராட்டத்தில் பங்கேற்ற ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

– மு.அ.பாரதி

## மோடி அரசு பதவி விலக கோரி
# மார்க்கிஸ்ட் லெனினிஸ்டு கட்சி சிறப்பு மாநாடு



இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் சார்பில் மணிப்பூர் கலவரத்தை மன்னிக்கமாட்டோம்,மோடி பதவி விலகும் வரை ஓயமாட்டோம் என்ற முழக்கத்துடன் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் சிறப்பு மாநாடு நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மதுக்கூர் இராமலிங்கம், விடுதலை சிறுத்தைகளின் நிறுவன தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட பொருளாளர் பி. தாமரைசிங், கஸ்தூரி தாமரை சிங் இல்ல திருமண விழா கன்னியாகுமரி மாவட்டம் திங்கள் சந்தையில் நடைபெற்றது. மணமகள் செல்வி கோபிகா, மணமகன் செல்வன் சரத்குமார் இணையர்களின் மணவிழா வாழ்த்தரங்க நிகழ்விற்க்கு குமரி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர்கள் எஸ். அணில்குமார் ஜி.சுரேஷ்மேசியதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மணமக்களை கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் வாழ்த்தி பேசினார்.

மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலத் தலைவர் எஸ்.கே. கங்கா, மாநிலச் செயலாளர் மருத்துவர் த.அறம் நாவலாசிரியர் பொன்னீலன், சொக்கலிங்கம், டாக்டர் சிவகுமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பெல்லார்மின் ,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் செயற்குழு உறுப்பினர் கனகராஜ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் செல்லச்சாமி உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மணமக்களை வாழ்த்தினர்.

நிகழ்வில் மணமகள் குடும்பத்தின் சார்பில் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூபாய் 2000 கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர்களிடம் வழங்கப்பட்டது.

## மணல் கொள்ளையை தடுத்து போராடி
# படுகொலை செய்யப்பட்ட கனகராஜ் நினைவுதின மலரஞ்சலி

விருதுநகர் மாவட்டம் வீரசோழம் பகுதியில் மணல் கொள்ளைக்கு எதிராகவும், மத ஒற்றுமைக்காகவும் பாடுபட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் கனகராஜ் சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்டார். அவரது நினைவு நாளில் விருதுநகர் மாவட்டகுழு அலுவலகத்தில் அவரது படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கட்சியின் தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி , மாவட்ட பொருளாளர் எஸ். பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், திருச்சுழி ஒன்றிய செயலாளர் செல்வம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

## வினாடி - வினா விடைகள்

1. 1927 ஜனவரி 18 ஆம் தேதி வைஸ்ராய் இர்வின் திறந்து வைத்தார்.
2. பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தில் வீசினார்
3. மக்களவை (லோக்சபா)
4. கேரளாவில் 1957ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அமைத்தது
5. வாலண்டினா தெரேஷ்கோவா
6. சூடான்

# ஏ.ஐ.டி.யு.சி. யின் தேசிய பொதுச்செயலாளர் அமர்ஜித் கௌர் அவர்களுக்கு வரவேற்பு

கோவை ஜீவா இல்லத்தில் பி.எஸ்.என்.எல். ஊழியர் சங்கத்தின் கல்வி மைய கூட்டம் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்வதற்காக ஏ.ஐ.டி.யு..சி. யின் தேசிய பொதுச் செயலாளரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர்களில் ஒருவருமான அமர்ஜித் கவுர் விமான மூலம் கோவை வந்தார். அவருக்கு விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், பி.எஸ்.என்.எல். ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் பாண்டிச்சேரி காமராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் மு.வ.கல்யாணசுந்தரம், வழக்கறிஞர் ஜி.பி.சக்திவேல், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சக்திவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




# கடலில் காற்றாலை அமைக்கும் திட்டத்தை கைவிடுக!

கடலில் காற்றாலை அமைக்கும் திட்டம், கடல் அட்டை தடை நீக்கம், இலங்கை கடற்படை தாக்குதல் உள்ளிட்ட பிரச்சனைகள் குறித்து ஒன்றிய அரசின் மீன்வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா அவர்களிடம் மாநில செயலாளர் சி.ஆர்.செந்தில்வேல் தலைமையில் ஏஐடியுசி மீனவர் சங்க நிர்வாகிகள் குழு டெல்லியில் நேரில் சந்தித்து மனு அளித்தனர். அதில்

மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசியப் பூங்காவாக' 1986ல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இது தென்கிழக்கு ஆசியாவில் ஏற்படுத்தப் பட்ட முதல் கடல்சார் தேசியப் பூங்காவாகும். இப்பகுதியில் ஏராளமான பல்வகை கடல் வாழ் உயிரினங்கள் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த கடல் பகுதியில் கடலில் காற்றாலை அமைக்கும் திட்டம் கொண்டு வருவது மீன் வளத்தையும், கடல் வாழ் உயிரினங்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும் அத்துடன் மீனவர் வாழ்வாதாரம் பேரழிவை சந்திக்கும் என்பதால் இத்திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை கடற்படையினர் பல பத்தாண்டுகளாக நமது மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தடுத்தது நிறுத்தப்பட்டவேண்டும்,

ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கான கடன் வழங்க வேண்டும். ஏற்கனவே கடன்கள் தள்ளுபடி செய்ய வேண்டும்.

மத்திய அரசு கடந்த 2001ம் ஆண்டு முதல் கடல் அட்டைகளை பிடிக்க தடை விதித்துள்ளது. இந்த தடையை நீக்கி, மீனவர்கள் நலன் கருதி கடல் அட்டைகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

மேற்கண்ட குழுவில் ஏஐடியுசி நிர்வாகிகள் எம். செந்தில், ஜி. அழகுபாண்டி, ஆர். முகேஷ், மீனவ மகளிர் சங்க நிர்வாகிகள் பி. வடகொரியா, வி.சண்முககனி, எஸ்.காளியம்மாள், ஏ. அனிதாசீலி, பி.லெட்சுமி, எம். நம்பு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# லக்கிம்பூர் கேரியில் விவசாயிகளை படுகொலை செய்த அக்டோபர் 3ம் தேதி கருப்பு தினம்

## தமிழ்நாட்டில் கருப்பு கொடியேந்தி ஆர்ப்பாட்டம்

அனைத்து தொழிற்சங்கங்கள், ஐக்கிய விவசாயிகள் முன்னணி அறைகூவல்

மத்திய தொழிற்சங்கங்கள், தொழில்வாரியான கூட்டமைப்புகள், சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி (எஸ்கேஎம்) ஆகியவை விடுத்த அழைப்புக்கு இணங்க, தொழிலாளர்கள் விவசாயிகளின் அனைத்து இந்திய கூட்டு மாநாடு 2023 ஆகஸ்ட் 24ம் தேதி அன்று புதுடெல்லியில் தல்கதோரா ஸ்டேடியத்தில் நடைபெற்றது.

ஒன்றிய பாஜக அரசாங்கம் முரட்டுத்தனமாக செயல்படுத்தி வரும், பேரழிவையும் பேராபத்தையும் விளைவிக்கும்; தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், அனைத்துப் பகுதி சாதாரண மக்களுக்கும் கடுமையான வாழ்க்கைச் சூழல் ஏற்படுத்தியுள்ள, கார்ப்பரேட்களுக்கு சாதகமான கொள்கைகளைக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், சம்யுக்த கிசான் மோர்ச்சா என்ற பதாகையின் கீழ் விவசாயிகள், 13 மாதங்களாக டெல்லி எல்லையில் அமர்ந்து, உறுதியான போராட்டத்தை நடத்தினர்.

2021 அக்டோபர் 3ம் தேதி உத்தரப்பிரதேச மாநிலம், லக்கிம்பூர் கேரி மாவட்டத்தில் நடந்த விவசாயிகள் பேரணியின் போது, வேண்டுமென்றே கார் ஓட்டிச்சென்று மோதி நான்கு விவசாயிகளும், ஒரு பத்திரிகையாளரும் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்த வன்முறைகளால் மேலும் நான்கு பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில், விவசாயிகள் மீது நேரடியாக கார்களை ஏற்றி படுகொலை செய்த சதிக்கு காரணமாக கூறப்படும் ஒன்றிய உள்துறை இணைய அமைச்சர்

அஜய் மிஸ்ரா டெனியை அமைச்சர் பொறுப்பில் இருந்து விலக்குவதோடு, அவர் மீது வழக்கு தொடர்ந்து தண்டனை வழங்க வேண்டும் என கோரி அக்டோபர் 3ம்தேதியை நாடு முழுமையும் கருப்பு தினம் கடைபிடிக்க வேண்டும் என்று அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது,

இந்த முடிவை தமிழ்நாட்டில் செயல்படுத்தும் விதமாக அக்டோபர் 3 ஆம் தேதி மாவட்ட தலைநகர்களிலும், வாய்ப்புள்ள மையங்களிலும் கருப்பு கொடியேந்தி, கருப்பு பட்டை (பேட்ஜ்) அணிந்து தமிழ்நாட்டின் அனைத்து தொழிற்சங்கங்களும், ஐக்கிய விவசாயிகள் முன்னணியும் (எஸ்கேஎம்) இணைந்து ஆர்ப்பாட்டங்களை திட்டமிட்டு நடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# தடையின்றி சாதி சான்றிதழ் வழங்குக!

## பழங்குடி மக்கள் சங்க ஒன்றிய மாநாடு திர்மானம்

தமிழ்நாடு பழங்குடி மக்கள்சங்க மதுராந்தகம் தொகுதி மாநாடு சங்கத்தின் தொகுதி மாநாடு தோழர் கே. சுரேஷ் தலைமையில் நடைபெற்றது.அனைவரையும் மணிகண்டன் வரவேற்று பேசினார். மாநாட்டை துவக்கி வைத்து மாநில துணைச்செயலாளர் ஜா. பூபாலன் சிறப்புரையாற்றினார். மாவட்டதுணைச்செயலாளர் ஒய். ஹாருன்பாஷா வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட தலைவர் க. ஜெகதீசன் நிறைவுரையாற்றினார். சமூக சான்றிதழ், வீட்டு மனை, இலவச மின்சாரம் ஆகியவை உடனடியாக வழங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மதுராந்தகம் தொகுதியின் ஒருங்கிணைப்பாளராக கே. சுரேஷ் தேர்வு செய்யப்பட்டார். கே. சண்முகம் அனைவருக்கும் நன்றி கூறினார்.



# தந்தை பெரியார் 145வது பிறந்தநாள் விழா



தந்தை பெரியாரின் 145வது பிறந்த நாள் விழா தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

**நாகர்கோவில்:** தந்தை பெரியாரின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில், மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலச் செயலாளர் மருத்துவர் அறம் அவர்களும் நாகர்கோவிலில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் தா. சுபாஷ் சந்திர போஸ் தலைமை வகித்தார். மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஆர்.இசக்கிமுத்து, கல்யாணசுந்தரம், அருள்குமார், ஆரல் புஷ்பராஜ் வாசு குருசாமி உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**தருமபுரி:** தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம் இலளிகம் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் மாநிலக்குழு உறுப்பினர் இ. அலமேலு தலைமையில் தந்தை பெரியார் பிறந்த தின நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் மாநில செயலாளர் ஜெ. பிரதாபன் கலந்துக் கொண்டு தந்தை பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் நல்லம்பள்ளி ஒன்றிய தலைவர் எல். சி. கிருஷ்ணன், மாவட்டக்குழு உறுப்பினர் கோவிந்தம்மாள், எல் ஆர் அபிமன்னன், சாந்தி,செல்வி,செந்தில், பொன்னுசாமி மற்றும் தோழர்கள் கலந்துக் கொண்டனர். இறுதியில் சங்க உறுப்பினர் எல். பி .நாகராஜன் நன்றி கூறினார்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் பெரியார் சிலை முன்பு இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் தலைமையில் நடைபெற்றது.இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் எஸ். தாமரைச்செல்வன், மக்கள் அதிகாரம் மாவட்ட செயலாளர் தேவா,மார்க்சிய, பெரியாரிய அம்பேத்கரிய உணர்வாளர்கள் ஆட்டோ கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சாமிநாதன், ஏ ஐ டி யூ சி ஆட்டோ சங்க மாநகரச் செயலாளர் ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்ட மாநாடுகள்




இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட மாநாடுகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

**செங்கல்பட்டு:** இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் 10வது மாவட்ட மாநாடு மறைமலை நகரில் என்.புஷ்பராணி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில தலைவர் பி.பத்மாவதி அமைப்பின் கொடியினை ஏற்றிவைத்து வாழ்த்துரை வழங்கினார். இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் ஏ. ராஜ்குமார் வாழ்த்துரை வழங்கினார்.

சமூக நீதி கண்காணிப்பு குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி வாழ்த்துரை வழங்கினார். தலைவராக என்.புஷ்பராணி செயலாளராக டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, பொருளாளராக எம்.அபிராமி, துணை செயலாளராக ஆர்.ரெங்கநாயகி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். இதில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட துணை செயலாளர் வி.வீராசாமி, மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

**தென்காசி:** இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தென்காசி மாவட்ட மாநாடு ஜி. சண்முக வடிவு, எஸ்.பாக்கியம் எம்.சி., இ. வள்ளி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

எம்.சரஸ்வதி கொடியேற்றினார். மாநில துணை செயலாளர் எம்.கண்ணகி சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் டி .இசக்கி துரை, மாவட்ட நிர்வாக குழு ப .வேலு, மாவட்ட நிர்வாக குழு ஜெ .அந்தோணி ராஜ், ஜனசக்தி செய்தியாளர் கே. பழனிச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தலைவராக எஸ்.பாக்கியம், செயலாளராக ஜி .சண்முகவடிவு, பொருளாளராக இ. வள்ளி, துணை தலைவராக க.சிவகுருவு, துணைச்செயலாளராக ம.ஆவுடைஈஸ்வரி ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

பெண்களுக்கு சட்டமன்றம் நாடாளுமன்றத்தில் 33% இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல், காய்கறி, மளிகை பொருட்கள் விலையைகுறைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருச்சி புறநகர்:** திருச்சி புறநகர் மாவட்டம் திருவெறும்பூர் தாலுகாவில் உள்ள ஏஐடியூசி தொழிற்சங்க அலுவலகத்தில், திருச்சி புறநகர் மாவட்ட இந்திய மாதர் தேசிய சம்மேளனம் இரண்டவது மாநாடு நடைபெற்றது. இ.கவிதா, பி.மாரியம்மாள், செலின் லீமாரோஸ் ஆகியோர் தலைமை வகித்தனர். மாநாட்டு கொடியை மூத்த தோழர் ஜெ.ரஹ்மத்துன்னிஷா ஏற்றிவைத்தார். மாவட்ட செயலாளர் எஸ்.ஜெயக்குமாரி வேலை அறிக்கையை சமர்ப்பித்தார்.

இதில் கௌரவத் தலைவர்களாக எஸ்.ஜெயக்குமாரி, ஜெ.ரஹ்மத்துன்னிஷா, புதிய மாவட்டத் தலைவராக இ.கவிதா, துணைத் தலைவர்களாக ஜெ.வைகுர்யா கே.இளையராணி, மாவட்டச் செயலாளராக பி.மாரியம்மாள், துணைச் செயலாளர்களாக எஸ்.ரம்யா, வி.பிரேமாவதி, பொருளாளராக செலின் லீமாரோஸி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர் .

சம்மேளனத்தின் மாநிலத் தலைவரும், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான .பி.பத்மாவதி, மாநில துணைத் தலைவர் நிஷாசத்யன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புறநகர் மாவட்டச் செயலாளர் செ.ராஜ்குமார் ஆகியோர் புதிய நிர்வாகிகளை வாழ்தி உரை நிகழ்தினர்.

பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை உடனே அமல்படுத்த வேண்டும்.

விலைவாசியை கட்டுப்படுத்த வேண்டும்

கிராமப்புறங்களில் புதிய பெண் தொழில் முனைவோர்களை உருவாக்கும் விதத்தில் பெண்களுக்கான தொழில் பூங்காக்கள் திருச்சி மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் அமைக்க வேண்டும்.உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

## அர்ச்சகர் பணியில் பெண்கள் நியமனம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

**இரா.முத்தரசன் அறிக்கை**

அர்ச்சகர் பணியில் பாலின சமத்துவம் காணும் முறையில் ஆகம விதிகளைக் கற்று தேர்ந்த மூன்று பெண்கள் நியமனம் பெற்றிருப்பது பெருமகிழ்ச்சி அளிப்பதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வரவேற்றுள்ளார்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சமூகநீதி சார்ந்த உரிமை சமூக நிலையிலும், சட்ட ரீதியாகவும் நீண்டகாலப் போராட்டத்திற்கு பிறகு நடைமுறைக்கு வந்துள்ளது. ஆகம விதிகளை கற்றுத் தேர்ந்தவர்கள் யாரும் அர்ச்சகராகலாம், அதற்கு சாதி தடையில்லை என்பதை உச்சநீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து கேரளா மற்றும் தமிழ்நாட்டிலும் பல சாதி பிரிவைச் சேர்ந்தவர்கள் அர்ச்சகர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இந்த அர்ச்சகர் பணியில் பாலின சமத்துவம் காணும் முறையில் ஆகம விதிகளைக் கற்று தேர்ந்த பெண்கள் மூன்று பேர் க.ரம்யா, சி.கிருஷ்ணவேணி மற்றும் ந.ரஞ் சிதா ஆகியோர் அர்ச்சகர்களாக நியமனம் பெற்றிருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. அர்ச்சகர் பணி நியமனம் பெற்றுள்ள பெண் அர்ச்சகர்களுக்கு பாராட்டுதல்களை தெரி விப்பதுடன், பெண்களை ஒதுக்கி வைத்து தாழ்வுபடுத்தி, கோயில் கருவறைக்குள் நுழைவதை தடுத்து வரும் சனாதன கருத்துக்களை நிராகரித்து சமூக நீதி உரிமைகளை நிலை நாட்டுவதில் உறுதி காட்டி வரும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்று, நன்றி பாராட்டுகிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## நவீன அறிவியல் மருத்துவமும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்

**– கருத்தரங்கம்**

தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் மற்றும் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் சார்பில் மருத்துவ மாணவர்களும், நவீன அறிவியல் மருத்துவமும் எதிர் கொள்ளும் பிரச்சினைகளும் தீர்வுகளும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் திருச்சியில் சங்கத்தின் திருச்சி மருத்துவக் கல்லூரி அமைப்பாளர் டாக்டர் எம். கிருஷ்ணா தலைமையில் நடைபெற்றது. மாணவர் மன்றப் பொருளாளர் அ.அசோக் வரவேற்பு வழங்கினார்.

குழந்தைகள்நல மருத்துவர்கள்கே.முத்துக்குமார்,சாமிநாதன் வாழ்த்துரை வழங்கினார். சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் கார்த்திகேயன், துணைத்தலைவர் மதுமிதா, சுப்ரஜித், தீபக் ரோஷன்,

தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் வெளிநாட்டுப் பிரிவு செயலாளர் மாநில தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

மருத்துவ மாணவி எம்.சுஸ்மிதா நன்றி நவின்றார்.

## மகாகவி பாரதி நினைவஞ்சலி

மகாகவிபாரதிநினைவுதினநினைவஞ்சலிநிகழ்ச்சிசேலத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கலை இலக்கியப் பெருமன்ற சேலம் மாவட்ட செயலாளர் கே.வி.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். இஸ்கப் மாவட்ட கௌரவத் தலைவர் ஏ.மோகன், கலை இலக்கியப் பெருமன்ற மாவட்ட தலைவர் பூமிபாலகன் பாரதி சிலைக்கு மாலை அணிவித்தனர். கலை இலக்கிய பெருமன்றம் சி.ரவீந்திரன், தமிழறிஞர் தாரை.குமரவேலு நினைவஞ்சலி உரையாற்றினர். இறுதியாக இஸ்கப் மாவட்ட பொதுச்செயலாளர் டி.வி.கருணைதாஸ் நன்றியுரையாற்றினார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 132. வறிஞரே நீவிர் அறிவீரோ

**வறிஞரே நீவிர் அறிவீரோ அறிஞர்**

**அறையும் அறிவு ரையை**

ஏழை எளிய மக்களே! அறிஞர் என்று சொல்பவர் அறிவுரையை நீங்கள் அறிய மாட்டீர்கள். ( அவை அனைத்தும் உங்களை கீழாக்குபவை ).

**உழைப்பாரை ஒன்றாக எண்ணுமெண்ணம் இல்லாஅ**

**எல்லா உரையும் கறை**

உழைப்பவர்களை உயர்ந்த இடத்தில் வைக்க எண்ணாத, எந்த சொல்லும், ( நூலும்) பிழைபட்டதேயாகும். (ஒன்றாக – உயர்வாக, சமமாக).

மாடர்ன் ஆர்ட் என்பது மன்னனின் ஆடைகள் போல. இல்லாத ஒரு ஆடை அற்புதமாக இருக்கிறது என்று புகழ் பெற்ற ஒருவர் அடித்துப் பேசினால் எல்லோரும் ஆமாம் அற்புதமாக இருக்கிறது என்று பேசத் தொடங்கிவிட்டார்கள்.

# கலை இலக்கியத் துறையில் ஊடுருவும் சி.ஐ.ஏ

2

### இரண்டாவது கேள்வி

ஏன் இந்த avant garde பாணி ஓவியங்களை கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்துக்கு சி. ஐ. ஏ. தேர்ந்தெடுத்தது என்பது.

இதற்கான பதிலை டாம் பிரடன் இந்த ஆவணப்படத்துக்கு அளித்த பேட்டியில் சொல்கிறார். டாம் பிரடன் வேறு யாரும் இல்லை. அந்தக் காலத்தில் சி ஐ ஏவின் கலை இலக்கிய பிரிவின் இயக்குநராக இருந்து இந்த நடவடிக்கைகளை வழி நடத்தியவர்.

சோவியத் யூனியன் மற்றும் இடதுசாரிகளின் கலை இலக்கியப் பார்வையில் சமூகமே பிரதானமானதாக இருந்தது. தனி மனிதர்களின் வெற்றி, தோல்வி, செல்வம், வறுமை, அறிவு, அறிவின்மை போன்றவை சமூகத்தின் தாக்கத்தினாலே முடிவு செய்யப்படுகின்றன. எனவே தனிமனித வாழ்க்கையோடு சமூக சூழலையும், வரலாற்றுப் பின்னணியையும் பிரதிபலிப்பதே சிறந்த கலை வடிவம் என்று கருதப்பட்டது. இது நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் நம்பிக்கையுடன் அணுகியது.

ஒரு வீரம் மிகுந்த அறிவு மிகுந்த தனிநபர் ஜனாதிபதி, மருத்துவர் போன்றவர் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடுவார், எல்லோரையும் காப்பாற்றிவிடுவார் என்று நம்ப வைப்பது முதலாளித்துவ கலை.

இதே போல கொரோனா, பஞ்சம், போர், அரசு அடக்குமுறை போன்றவற்றை விட தனி மனிதர்களின் உணர்வுகளுக்கு அதீத முக்கியத்துவம் கொடுப்பது அமெரிக்க அரசாலும் சி. ஐ. ஏ. வாலும் விரும்பப்பட்டது. வறுமைக்கு காரணம் அநீதியான சமூக அமைப்பு என்பதை பதிவு செய்வதைவிட, வறுமையால் ஏற்படும் துயரம், வெறுமை, தனிமை ஆகியவற்றை மட்டும் தனிநபர் விஷயமாக எழுதுவதும், வரைவதும் வரவேற்கப்பட்டது. இதற்கான வாய்ப்பை மாடர்ன் ஆர்ட் வழங்கியது.

மாடர்ன் ஆர்ட் புத்தம் புதிதாக இருந்தது, படைப்பூக்கம் மிக்கதாக இருந்தது. தனி மனிதத் தன்மை கொண்டதாக இருந்தது. இதன் காரணமாகவே சி ஐ ஏ மாடர்ன் ஆர்ட்டை நோக்கி ஈர்க்கப்பட்டது என்று சி ஐ ஏ அதிகாரிகள் கூறுகின்றனர்.



ஜேம்ஸ் பாண்ட் தனிமனிதராக நின்று நாட்டைக் காப்பாற்றுகிறார். இதே போல மாடர்ன் ஆர்ட் தனி மனிதர்களின் குரலைக் கொண்டாடுவதாகும். இது போன்ற ஒற்றைத் தனிமனிதர்களின் குரலைக் காப்பாற்றுவதுதான் அமெரிக்க கருத்து சுதந்திரம் ஆகும்.

மிக நுட்பமான முறையில் இந்த பதில்களை சம்பந்தப் பட்டவர்களின் குரலிலேயே சொல்ல வைத்து சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கிறது படம்.

படம் சொல்லும் காரணங்களைத் தவிர வேறு காரணங்களும் இருந்தன என்று பல்வேறு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த ஓவியர்கள் முன்னாள் இடதுசாரிகள் என்பதால் இவர்களைக் கொண்டு இடதுசாரி வட்டங்களுக்குள் ஊடுருவுவது சாத்தியம் என்று சிஐஏ கருதியது. இடதுசாரி கலை இலக்கியம் என்ற போர்வையில் இடதுசாரி எதிர்ப்பு கலை இலக்கியங்களை கொண்டு சேர்த்து விடுவது என்ற உத்தி பயன்படுத்தப்பட்டது என்பது போன்ற கருத்துக்கள் வைக்கப்படுகின்றன. ஆனால் இப்படத்தின் இயக்குனரான பிரன்சிஸ் ஸ்டோனர் சாண்டர்ஸ் திட்டவட்டமான ஆதாரங்கள் உள்ள விஷயங்களுடன் நின்று கொள்கிறார். ஊகங்கள் படத்தில் உறுதியாக புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இந்த மாடர்ன் ஆர்ட்டை பிரபலப் படுத்தவும் அதற்கு சந்தையை உருவாக்கவும் பணக்காரர்கள், பவுண்டேஷன்கள், மியுசிய டைரக்டர்கள், விமர்சகர்கள், ஆகியோரை நாடியது சி ஐ ஏ.

மியுசியம் ஆப் மாடர்ன் ஆர்ட் அமெரிக்க நவீன ஓவியக் கலையை அரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்வதில் முக்கிய பங்கு வகித்தது. இந்த மியுசியத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான ராக்பெல்லரும் வேறு பல டிரஸ்டிகளும், சேர்மன்களும் சி ஐ ஏவுடன் இணைந்து செயல்பட்டனர். இதே போல விட்னி மியுசியம் சி ஐ ஏவுடன் இணைந்து செயலாற்றியது. இந்த மியுசியங்களும் சி ஐ ஏவை போலவே கம்யூனிச எதிர்ப்பு அரசியல் கொண்டவையாக இருந்தன.

சி ஐ ஏ வும், இந்த அருங்காட்சியக அதிபர்களும், பெரும் தொழிலதிபர்களும் இணைந்து செயல்பட்டு பனிப்போர் காலத்தில் கலை இலக்கியப் போக்குகளை கட்டுப்படுத்தினர்.



நெல்சன் ரக்பெல்லர் தனது வங்கி மூலம் மாடர்ன் ஆர்ட்டில் கார்ப்பரேட் வணிகத்தை தொடங்கி வைத்தார். நவீன ஓவியங்களை வாங்கி கண்காட்சியில் வைக்க வருடத்துக்கு ஐந்து லட்சம் டாலர்கள் முதலீடு செய்தார். 13,000 ஓவியங்கள் இப்போது இந்த வங்கியின் கையிருப்பில் உள்ளன. இதன் மூலம் நவீன ஓவியங்களுக்கு நல்ல விலை இருக்கிறது என்ற எண்ணம் நாட்டில் உருவாக்கப்பட்டது. நவீன ஓவியங்களை விற்று வாங்குவது லாபகரமானதாக மாறியது. இப்படித் திரட்டப்பட்ட பணத்தைக் கொண்டு மாடர்ன் ஆர்ட் பாணி ஓவியக் கலை உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

கிளமாண்ட் கீர்ன்பர்க் அமெரிக்காவின் முக்கியமான கலை விமர்சகர். அப்ஸ்ட்ராக்ட் எக்ஷ்பிரஷனிம் எனப்படும் மாடர்ன் ஆர்ட்டுக்கு ஆதரவாக இருந்தவர். முன்னாள் டிராட்கியிஸ்ட். இவர் இந்த கலை வடிவத்தை பெரிய அளவுக்குப் பிரபலப் படுத்தியவராவார். நவீன ஓவியரான ஜாக்சன் போலாக்கை அமெரிக்காவின் மிகச் சிறந்த ஓவியர் என்று புகழ்ந்தார் கிரீன்பர்க். இவர் பின்பு சி ஐ ஏ உருவாக்கிய காங்கிரஸ் ஃபார் கல்சுரல் பிரீடம் என்ற உலகு தழுவிய அமைப்பின் அமெரிக்கன் கிளையை உருவாக்கினார்.

இவர் சி ஐ ஏவின் விருப்பத்தை அறிந்தே இந்த நவீன ஓவியங்களை பிரபலப் படுத்தும் வேலையில் இறங்கினார் என்று ஆவணப்படத்தில் பல நிபுணர்கள் கூறுகின்றனர். அதே போல கிரீன் பர்க் தற்செயலாக செய்த ஒன்றை சி ஐ ஏ பயன்படுத்திக் கொண்டது என்ற வாதத்தை வைப்பவர்களுக்கும் படம் இடம் அளிக்கிறது.

ஆனால் கீரீன் பர்க் சி ஐ ஏவின் நோக்கம் அறியாமல் எப்படி அமெரிகாவில் காங்கிரஸ் ஃபார் கல்சுரல் பிரீடம் அமைப்பை உருவாக்க முடியும்? முடிவை நம் சிந்தனைக்கே விட்டுவிடுகிறது படம்.

ஐரோப்பாவில் நடந்த பல கலை கண்காட்சிகளில் சி ஐ ஏவின் கரம் இருந்தது என்பது இப்போது வெளியாகி வருகிறது. நிக்கலஸ் நபகோவ் பாரிஸில் நடத்திய இருபதாம் நூற்றாண்டு கலைகளின் கண்காட்சி மிக முக்கியமான ஒன்று. நபக்கோவின் பாரிசுக்கான டிக்கெட் பிசினெஸ் கிளாச் டிக்கெட் சி ஐ ஏவால் வாங்கப்பட்டது என்று நபாக்கோவே கூறுகிறார். எல்லா தலை சிறந்த நவீன ஓவியர்களின் ஓவியங்களும் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

மாடர்ன் ஆர்ட் என்பது மன்னனின் ஆடைகள் போல. இல்லாத ஒரு ஆடை அற்புதமாக இருக்கிறது என்று புகழ் பெற்ற ஒருவர் அடித்துப் பேசினால் எல்லோரும் ஆமாம் அற்புதமாக இருக்கிறது என்று பேசத் தொடங்கிவிட்டார்கள். இல்லாவிட்டால் தங்களுக்கு அறிவுஜீவி இமேஜ் கிடைகாது என்று அஞ்சுவார்கள் என்று ஒரு விமர்சகர் ஆவணப்படத்தில் கூறுகிறார்.

கிரீன் பர்க், நபாக்கோவ் போன்றவர்கள் இந்த வேலையை செய்தனர்.

காங்கிரஸ் ஃபார் கல்சுரல் பிரீடம் அதாவது பண்பாட்டு சுதந்திரத்துக்கான அமைப்பு என்ற கம்யூனிச எதிர்ப்பு அமைப்பை சி ஐ ஏ 1950 ஆம் ஆண்டுவாக்கில் உருவாக்கியது. இதன் முக்கிய பொறுப்பில் புகழ்பெற்ற கம்யூனிச எதிர்ப்பு நாவல்களை எழுதிய ஆர்தர் கோய்ஸ்ட்லர் இருந்தார்.

தொடங்கிய வேகத்தில் இந்த அமைப்பு 35 நாடுகளில் கிளைபரப்பியது. 280 முழு நேர ஊழியர்கள் இந்த அமைப்பில் இருந்தனர். ஏராளமான இலக்கிய ஏடுகளை சி ஐ ஏ இந்த அமைப்பின் பெயரில் தொடங்கி நடத்தியது. பிரிட்டனில் மிகவும் புகழ்பெற்ற என்கவுண்டர் இதழ், இந்தியாவின் க்வெஸ்ட், Tempo Presenti, quadrant போன்ற ஏடுகளின் உண்மையான உரிமையாளர் சி ஐ ஏதான் என்று சி ஐ ஏ அதிகாரிகள் ஆவணப்படத்தில் ஒப்புக் கொள்கின்றனர்.

மேலும் பல இலக்கிய இதழ்களுக்கு சி ஐ ஏ நிதியுதவி செய்து வந்தது. போரால் பேரழிவுக்கு உள்ளாகியிருந்த ஐரோப்பாவில் ஒரு இலக்கிய இதழ் நடத்த வேறு வழி இருக்கவில்லை. சி ஐ ஏ பணம் கொடுத்தது. இந்த ஏடுகளிடம் இருந்து தனக்கு வேண்டியதை கோரிப் பெற்றது. ழீன் பால் சார்த்தர் மட்டுமே சி ஐ ஏ நிதியுதவியை பெற மறுத்து விட்டார்.

இந்த அமைப்பு, இதழ்கள், இவற்றோடு தொடர்பு கொண்டுள்ள இலக்கிய வாதிகளின் மூலம் சி ஐ ஏ தனக்கு விருப்பமான இலக்கியங்களை உன்னதமானவை, அற்புதமான கலை வடிவங்கள் என்று வெற்றிகரமாகப் பிரச்சாரம் செய்தது. சமூக உணர்வு கொண்ட எழுத்துக்கள் அழகியல் இல்லாதவை, வெறும் பிரச்சாரம், அவற்றில் அது இல்லை, இது இல்லை என்று அடித்துப் பேசி நம்ப வைத்தது.

இந்த அமைப்பின் உதவி கொண்டே நவீன ஓவியங்கள் அறிவு ஜீவிகளுக்கானவை என்ற பிரச்சாரத்தை சி ஐ ஏ வெற்றிகரமாக நடத்தியது.

1967 லிலேயே கான்கிரஸ் பார் கல்சுரல் பிரீடம் சி. ஐ. ஏ. வால் நடத்தப்படும் அமைப்பு என்பது வெளியாகிவிட்டது. இந்த ஆவணப்படத்தில் சி ஐ ஏ அதிகாரிகளும் எப்படி இதை நடத்தினோம் என்று வெட்ட வெளிச்சமாகப் பேட்டி அளிக்கின்றனர். சி ஐ ஏ இந்த அமைப்பு தொடர்பான ஆவணங்களை வெளியிடுகிறது.

சி ஐ ஏ அதிகாரிகள் இதை வெளிப்படையாகச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்பதையும் ஆவணப்படம் அலசி ஆராய்கிறது.

சி ஐ ஏவிடமிருந்து நிதியுதவி பெற்ற கலை இலக்கிய வாதிகள் ஒரேயடியாக தன்னை சார்ந்து இருப்பதை சி ஐ ஏ விரும்பவில்லை. இடதுசாரிகளுடனான நேரடிப் போட்டியில் தனித்து அவர்கள் நிற்க வேண்டும் என்பதை சி ஐ ஏ விரும்பியது. எனவே இந்த உறவு குறித்து தகவல்களை தானே வெளியே கசிய விட்டது என்கிறது ஆவணப்படம்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பிறகு இந்த அமைப்பு, இதற்கு செய்து வந்த செலவு எல்லாம் தேவையற்றவை ஆகிவிட்டன. இனி இந்த மாதிரி உறவு சாத்தியம் இல்லை என்று உணர்த்த முந்தைய நடவடிக்கைகள் வெளிப்படுத்தப்படுகின்றன என்று ஒரு கருத்தும் உள்ளது.

இன்று இலக்கிய வாதிகளுக்கு வெளிப்படையாகவும், சட்டபூர்வமாகவும் போர்டு பவுண்டெசன் போன்றாவை நிதியுதவி அளிக்கின்றன. எனவே பழைய ரகசிய முறைகள் அவசியமில்லை. அதே நேரம் கம்யூனிசத்தை வெற்றி கொண்ட சாதனை உலகுக்கு அறிவிக்கப்பட வேண்டியதும் அவசியம்.

– இரா.முருகவேள்


தமிழ்நாடு அரசு சிறுபான்மை நல ஆணையம் உறுப்பினர்
நாகூர் ABT தமிம் அன்சாரி சாஹிப்
இல்லத் திருமண (நிக்காஹ்)
வரவேற்பு அழைப்பிதழ்
மணமகள்:
ஹாஜியா ABT ரஹ்மத் ரேஹானா
A.The.DFA ஆலிமா
மணமகன்:
V. செய்யது ஹமீது அன்வர் சாஹிப்
B.TECH (CHEMICAL).SFC.SSYB
வரவேற்பு நாள்
1.10.2023
ஞாயிற்றுக்கிழமை
இடம்: நாகூர்
(நாகப்பட்டினம் மாவட்டம்)
அனைவரையும்
அன்புடன்
வரவேற்கிறோம்
A.B.தமிம் அன்சாரி சாஹிப்
உறுப்பினர், தமிழ்நாடு அரசு சிறுபான்மை நல ஆணையம்
நாகப்பட்டினம் மாவட்டம்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 23.09.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# தொடர் மறியல் போராட்டக் காட்சிகள்


தஞ்சை தெற்கு


நாகப்பட்டினம்


அம்மாபேட்டை


நாகப்பட்டினம் ஆயக்காரன்புலம்


ஈரோடு


நாகப்பட்டினம் திருமருகல்


காஞ்சிபுரம்


நெல்லை


வையம்பட்டி


இராஜபாளையம்


உடுமலைப்பேட்டை

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.